சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
சபையார்
பால பாடங்களே

உ
சிவமயம்

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
ஆதரியுங்கள்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ௵ புரட்டாதி ௴ கடு உ (1942 அக்டோபர் 1 வியாழக்கிழமை) [இலக்கம் ௬௭ 48

சிவஞானபோத நூல்

(அச்சுவேலி, சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்)

திருக்கைலாச பரம்பரைச் சைவ சந்தானாசாரிய பிரதம குருமூர்த்திகள் மெய்கண்ட தேவநாயனார். அவர் நூல் சிவஞானபோதம். குலசேகரன் பட்டினத்துத் திரு. இராமசாமிபிள்ளை என்பவர் கலாநிலையத்தின் தொடர்பாக அச் சிவஞானபோதத்துக்கு விரிவுரை நிகழ்த்தியுள்ளார்கள். அது இப்பத்திரிகையில் வெளிவந்துகொண்டிருக்கிறது. அவர் சிறப்புப் பாயிர விரிவுரையில், சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு என்று சொல்ல இடமில்லை; என்றார். அது பொருந்துமோ என்பது ஆராயத்தக்கது.

சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இருமொழிக்கும் முதலாசிரியர் சிவபிரான். இந்த இருபாஷைகளிலுமே மிகச்சிறந்த நூல்கள் அளவின்றியிருக்கின்றன. இப்பாஷைகளாகிய ஞானக்கண்களைப் பெறுதார் அந்நூல்களை அறிந்து அப்பொருள் கண்டு பயன்கொள்ளமாட்டார். அவர் உலகப்பொருள் அறிதற்குக் கருவியாகிய ஊனக்கண்ணிழந்த அந்தகருக்கு ஒப்பாவர். நஞ் சமயாசாரியர்கள் 'ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயனறிகிலா வந்தகர்' எனவும், 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' எனவும், 'வடமொழியுந் தென்மொழியும் மறைகணான்கு மானவன் காண்' எனவும், 'செந்தமிழோ டாரியனைச் சீரியானை' எனவும், 'ஆரியத் தமிழோ டிசையானவன்' எனவும், கூறியருளிய திருவாசகங்களால் இவ்விருமொழியையும் ஒப்ப அங்கீகரித்தமை உணரப்படும். 'ஆரியமுந் தமிழுமுடனே சொல்லி' 'தமிழ்ச் சொல வடசொல்லெனு மிவ்விரண்டு-முணர்த்து மவனை யுணரலுமாமே' எனத் திருமூலநாயனார் ஈசனை இவ்விருமொழிக்கும் முதல்வனாகக் கூறினர். சங்கப் புலவரும்,

'ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந்
திதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரி
தால்—ஆரியம்
வேத முடைத்து தமிழ்திரு வள்ளு
வனார்
ஓது குறட்பா வுடைத்து'

எனக் கூறியுள்ளார்.

திராவிட மாபாடிய கர்த்தர்,

'இருமொழிக்குங் கண்ணுதலார்
முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார்
முனிவேந்த ரிசைபரப்பு
மிருமொழியு மான்றவரே
தழீஇயினா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு
மிதற்கைய முளதேயோ'

எனவும்,

குமர குருபர சுவாமிகள்

'வடநூற் கடலுந்—தேக்கு செந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செவிவாரினிறை—காக்குங் கருணைக் கடலே' எனவுந் திருவாய் மலர்ந்தருளினர்கள். ஆகவே, இருமொழியும் தம்முட் சமத்துவமுடையனவேயாம். சிலர் இவ்விருமொழிச் சைவநூல்களின் பொருளொருமை தேறமாட்டாது இடர்ப்பட்டுத் தம் மனம் போனவாறு சமயசாத்திர வரம்பழித்து வேண்டியவாறு ஆராய்ச்சி செய்து முடிவு கட்டுகின்றனர். அவை தமது சமயத்துக்கே இழிவாய்முடிவதை அறிகிலர். அவ்வாராய்ச்சிகள் பல. சிவஞானபோதம் மொழிபெயர்ப்பன்று எனக் கூறுவதும் அப்பலவற்றுள் ஒன்றாகும்.

இந்த நவீன கொள்கைக்கு உற்பத்திகர்த்தா யார்? இதனை ஆமோதித்தவர் யார்? சித்தாந்த நூலாசிரியர்கள் உரையாசிரியர்கள், பௌராணிகர்கள் திருவுளத்துக்கு இது ஒத்த கருத்தது தானோ? என்பன கண்டு ஆராயற்பாலன.

சிவஞானபோதம் ரௌரவாகமத்தில் அமைந்துள்ளது. மெய்கண்டதேவநாயனார் தமிழுலகம் உய்தற்பொருட்டு, சிவஞானபோதமென்ற முதனூற் பெயரையே பெயராக வைத்து மொழிபெயர்த்து வார்த்திகமென்னும் பொழிப்புரையுஞ் செய்தருளினர் என்பதே ஆன்றோர் கருத்து. திருவனந்தபுரம் பண்டிதர் ஸ்ரீ சுந்தரம்பிள்ளை என்பவரே சிவஞானபோதம் வடநூலின் மொழிபெயர்ப்பு அல்ல என்னும் நவீனக் கொள்கைக்கு மூலபுருடராவர். இவரிடம் தோன்றிய புதுக்கருத்தின் வழியே தொறனுமதிக நியாயமாகச் செல்வோரும் சிலருளராயினர். இதுபற்றிச் சித்தாந்த தீபிகை ஆசிரியர், ஜெ. எம். நல்லசாமிபிள்ளை என்னும் பெரியார் எழுதுவதாவது:-

"தென்மொழியிற் பயில்வோருக்கு வடமொழிப் பயிற்சி இல்லை;...சிலர் தற்காலம் சைவசமயமும் சைவநூல்களும் அதிலும் சிவஞானபோதமும் தமிழுக்கே யுரித்தெனக்கொள்கின்றார்கள். இது உண்மையாயின் அல்லவோ நமக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணும். ஆயினும் அதற்குத் தகுந்த ஆதாரத்தை யாரும் காட்டவில்லை யென்றே கொள்கின்றோம். இக் கருத்து எதுமுதல் உற்பத்தியாயின தென்பது எமக்குத் தெரியும். திருவனந்தபுரம் பண்டிதர் பி. சுந்தரம்பிள்ளை என்பவர் தம்முடைய சிவஞானபோத ஆங்கில மொழிபெயர்ப்பைப்பற்றி ஸித்தி என்னும் தினசரிப்பத்திரிகையிலெழுதிய மதிப்புரையிலேயே இக்கருத்து முதலில் வெளிவந்தது. அதற்குமுன் இக்கருத்தை யாரும் வெளியிடவில்லை. அப்பொழுதே நாம் பிள்ளை அவர்களுடன் தர்க்கித்து மறுத்துள்ளோம். அதுமுதலே சில நண்பர்கள் இக் கருத்தைத் தழுவிவருகின்றார்கள்" என்பதாம். ஆகவே இத்தகவற்ற கொள்கை சுந்தரம்பிள்ளை காலத்துக்கு முன் இருந்ததில்லை என்பதும், அவரே இதை உற்பத்தி செய்தவர் என்பதும், அக்காலத்திலிருந்தே சிலர் இதனைத் தழுவி வருகின்றார்கள் என்பதும் வெளியாயிற்று, சிறக,

வேதம் ஆகமம் என்னும் இருபெரு நூல்களே அநாதி முதலாகிய பசுபதியினால் அருளப்பட்ட நூல்களாம். ஏனையவையெல்லாம் இவை பிரமாணித்தும் விரித்த நூல்களாம் என்று அருணந்தி சிவாசாரியர் உபதேசித்தருளினர். ஆதலினாலே, சிவஞானபோதமும் இரௌரவத்துள் அடங்கியதென்பது துணியப்படும். "வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரித்த நூல்கள்... சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" எனவும், "ஆதலி னிவையெல்லா மருமறை யாகமத்தே யடங்கிடும் அவையிரண்டு மரனடிக்கீழடங்கும்" எனவும், "அருமறை யாகமமுதனூ லனைத்து முரைக்கையினால்...சுருதி சிவாகமமொழியச் சொல்லுவதொன்றில்லைச் சொல்லுவார் தமக்குறைபோய சொல்லொன்றுமிலதே" எனவும் சிவஞானசித்தியார் கூறிற்று.

வடமொழிச் சிவஞானபோதத்துப் பன்னிருசூத்திரங்களும் தமிழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன எனக் கூறுவர் அது பொருந்தாது. எத்தனையோகோடி கிரந்தசங்கையுடைய இருபத்தெட்டாகமங்களும், உபாகமங்களும் எங்கிருந்து மொழிபெயர்க்கப் பட்டன. அதன் மொழிபெயர்ப்பென்று சொல்லுவார்களாயின் பிரமாணமுண்டா? உண்டேனின் யாவை? சிவாகமத்தோற்றம் பற்றியும், அதனைச் சிவபெருமான் உபதேசித்தருளிய முறை பற்றியும் சிவாகமம் கூறுவது போன்ற திருமுறைக

தொடர்ச்சி 4-ம் பக்கம்

மனோன்மணி

பிரம்மஸ்ரீ:
ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
சுதுமலை.

மனோன்மனீ ரூபமாக இருப்பவள். இரண்டு புருவங்களுக்கும் நடுவிலிருந்து பிரமரந்திரமவரை இருக்கும் இடங்களில எட்டாவது இடம் மனோன்மனீயென்று பெயர். அவை இந்து, ரோதினீ, நாத, நாதாந்த, சக்தி, வியாபினீ, சமனை, உன்மனீ அல்லது மனோன்மனீ, மஹாபிந்து என்பனவாம்.

இதன் இலட்சணம்:-

யாசக்தி: காரணத்வேன தத்வார்த
வம் சோன்மனீஸ்மிருதா|
நாத்ர கால கலாமானம் நதத்துவம்
நசதேவதா||
லாஹிர்வாணம் பரமசுத்தம்ருத்ராவிக்
தரமதத் உச்யதே|
சிவசக்தி ரிதிக் யாதாநிர்வி கல்பா
நிரஞ்ஜனா||

வாமதேவாய நமோஜ்யேஷ்டாய நம: என்ற வேதவாக்கியத்தில சொல்லப்பட்ட மனோன்மனன் என்ற சிவனுடைய சத்திக்கு மனோன்மனீ என்று பெயர்.

மனமானது உன்மனிபாவம் அடையும்போது தெரியப்பட்டவள் என்பது பொருள்.

மனோன்மனீயென்று ஒருவித முத்திரைக்குப் பெயர். அதோடு அபின்னமாக இருப்பவள். அந்த முத்திரையின் இலட்சணமாவது கண்களை மூடாமலும் திறக்காமலும் பிராணவாயுவானது இரேசகம், பூரகம், இவை இல்லாமலும் மனமானது சங்கல்பம், விகல்பம் இவையில்லாமல் உன்மனிபாவமடைந்து அடியாளுடைய ஸ்வரூப தியானமாகவே இருப்பதாம்.

நேத்ரேய யோன்மேஷ நிமேஷ
முக்தே
வாயுர்யயா வர்ஜித ரேசபூர||
மனச்ச சங்கல்ப விகல்ப சூன்யம்
மனோன்மனீஸா மயிலக்ஷ்யதரா||

தியான த்யாத்ரு த்யேயங்களாகிற வித்தியாசம் போய்விட்டால மனசுக்கு இருக்கும் பாவமானது உன்மனியென்று பெயர்.

அல்லது தன்னைத் தியானம் பண்ணுவதால் அடியார்களுடைய மனசுக்கு உன்மனிபாவம் (மேலான ஞானத்தோடு-டி இருக்குந்தன்மையை) உண்டுபண்ணுவதால் (மனோன்மனீ) என்று பெயர்.

எல்லா விஷயங்களுமுடைய ஆசையை விட்டு இருதயகமலத்திலிருக்கும் ஈசனைத் தியானம் செய்யும்போது ஏற்படும் நிலைமைக்கு உன்மனீ பாவமென்று பெயர்.

இக்கருத்துக்களை உள்ளபடியறியாது சில அநுசகர்கள் மனோன்மணி யென்று எழுதியும் பேசியும் வருகிறார்கள். அதுமட்டோ ஆசிரியர் முடிவில் நியாயே நமார்க்கேண என்பதைவிட்டு ந்யாயேனமார்க்கேண எனவுஞ் சொல்லுகிறார்கள். இன்னும் பலவுள.

மதனுன்மணி யென்பது வைதிய அகராதியில இத்துப்புவுக்குப் பெயர். மனோன்மனீ, மனோன்மணி என இரண்டு சொற்களுக்கும் கருத்து வேறாம்.

விவசாய டைரெக்ரர்

மோட்டார் சைக்கில் விபத்தில் சிக்கினர்

கண்டியில் நடந்த சம்பவம்

கண்டி செப் 23—

நேற்றைத் தினம் விவசாய டைரெக்டர் மிஸ்டர், எட்மண்ட் ரோட்ரிக்கோ ஒரு மோட்டார் சைக்கிளால் பேராதனையில் மோதி விழுத்தப்பட்டதின் பலனாக காயத்துடன் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

மிஸ்டர். ரோட்ரிக்கோ தமது காரியாலயத்தில் இருந்து பகற் போசனத்திற்காகத் தமது வீட்டுக்குப் போவதாயினர், கலஹாப் பாதை வழியாகக் கால்நடையாக சென்று இவர் தமது வாசஸ்தலத்திற் பிரவேசிக்கும் பொருட்டுப் பேராதனைப் பாதையைக் கடக்கையில் அவரது திசையை நோக்கி வந்த இராணுவ இந்தியச் சிப்பந்தி ஒருவர் பின்புறத்திலிருந்து மோட்டார்ச் சைகிள் மீது வந்து அவர்மீது மோதினர். விவசாய டைரெக்ரர் பலமாகத் தாக்குண்டு தரையில் விழுத்தப்பட்டார். இச்சம்பவத்தைக் கண்ட

இசைத்தமிழ் நாடகத்தமிழ் என மூவகைப்படுத்து 'முத்தமிழ்' என்று முற்காலமுதல் வழங்கப்பட்டுவருகின்றது. இங்ஙனம் வழங்கப்படுவதும், இம்மூன்றற்கும் தனித்தனியாகவன்றியும் தொகுதியாகவும் இலக்கணம் வகுக்கப் பெற்றிருப்பதும் இம்மொழிக்கே சிறப்பாகவுரியன என்பர்.

வரும் ஸ்தலத்தின் வழி ஓரத்தில் ஓர் கடையை நடத்துபவருமான ஒரு ஸ்திரீ குறித்த செய்தியைக் குறித்த அதிகாரியின் வாசஸ்தலத்துள்ளவர்களுக்குத் தெரிவித்தார். ஸ்ரீமதி. ரோட்ரிகோவும் அவரது வேலைக்காரரும் ஸ்தலத்திற்கு விரைந்து சென்றபோழுது மிஸ்டர் ரோட்ரிகோ பிரக்ஞையற்றுக் கிடந்ததையும் அவரது மண்டைக் காயத்திலிருந்து இரத்தம் பீறிட்டதையும் கண்டனர். அவருடைய தோள் எலும்பு ஒன்று தகர்க்கப்பட்டிருந்தது.

காயமடைந்தவர் தமது காரில் ஆஸ்பத்திரிக் கேற்றிச் செல்லப்பட்டார். ஆனால், ஆஸ்பத்திரியை அடையுமுன் அவருக்கு மூர்ச்சை தெளிந்து விட்டது. மண்டைக் காயம் பலத்ததல்ல. அவருடைய தோள் எலும்பு தகர்க்கப்பட்டதென்பது எக்ஸ்ரே சோதனையிலிருந்து தெரியவந்தது. மிஸ்டர். ரோட்ரிகோவின் உடம்பு முழுவதும் பல சிறு காயங்களுமுண்டு.

இன்று மிஸ்டர். ரோட்ரிகோ திருப்திகரமாகக் குணமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

மதுரைமாநகரின்கண் 1-8-'42-ல் நடந்த இயற்றமிழ்
மஹாநாட்டைத் தொடங்கி வைத்தபொழுது
இராமநாதபுர அரசர் மகாராஜராஜஸ்ரீ
ரா. ஷண்முகராஜேசுவரஸேதுபதியவர்கள்

நிகழ்த்திய சொற்பொழிவு

தமிழன்பர்களே!

இவ்வியற்றமிழ் மஹாநாட்டைத் திறந்து வைப்பதன்முன், இப்பணியை எனக்களித்ததற்காக என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு யான் கருதும் சிலவற்றை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழி வேறொரு மொழியினின்று கிளைத்ததாகாது, தனக்கேயுரிய தனிச்சொற்களும் பிற பண்புகளும் கொண்ட தனிநிலையுடையதென்பது அறிஞர் கண்ட துணிபு. தமிழ் என்னும் சொற்கு இனிமையென்பது பொருளென்பதும், அவ்வினிமையுடைமைபற்றியே இம்மொழி இப்பெயர் பெற்றதென்பதும் இதன் சிறப்பை நன்கு விளக்கும். "யாமறிந்த பொருள்களிலே தமிழ்மொழிபோ லினிதாவதெங்குங் காணோம்" என்பது பாரதியார் வாக்கு. இம்மொழி இப்பொழுது வழங்கும் நிலவெல்லைக்கப்பாலும் பண்டு பரவிக்கிடந்ததென்றும், சரித்திரவாராய்ச்சிக்கெட்டாத மிக நீண்ட காலந்தொட்டுப் பரதகண்டத்தின் தென்பகுதியில் வழங்கும் பழமை வாய்ந்ததென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவ்வாறு தொன்றுதொட்டு இன்றுவரை நின்று நிலவும் பெருமை படைத்த இம்மொழி, இயற்றமிழ்

இம் மூன்று தமிழினுள், இயற்றமிழாவது—யாவரும் தம் உள்ளக் கருத்தை வெளியிடுவதற்குக் கருவியாய், உலகவழக்கினும் நூல்வழக்கினும் வசனமும் செய்யுளுமாய் இயலும் தமிழாம். அவ்வியற்றமிழ் இசையோடுகூடித் தாளமறுத்துப் பாடப்படும்வழி இசைத்தமிழாம். அவ்விசை தாளங்களோடு அபிநயமும் கூடியவழி நாடகத்தமிழாம்.

இயற்றமிழ்மனத்தைப்பற்றியது. இசை அதனுடன் இன்னோசை தழுவியது. நாடகம் அவற்றுடன் மெய்ப்பினியக்கம் கூடியது என்பர் ஆன்றோர். எனவே இயற்றமிழ் கரணங்கள் மூன்றனுள் முதலாவதான மனத்தை முக்கியமாகப் பற்றியதென்பது புலனாம். இவ்வாற்றால், இயற்றமிழ் முன்னே தோன்றியதாவதோடு ஏனையிரண்டு தமிழுக்கும் அடிப்படையாயும் நிற்றல் உணரப்படும். இக்காரணம்பற்றியே முத்தமிழுள் இது முன்னிற்பதாயிற்று என்பர்.

மனவுணர்ச்சியின் சிறப்பும், உணர்ந்ததைச் சொல்லால் உணர்த்தும் வன்மையும் மக்கட்பிறவிக்கு ஏனையவற்றினும் ஏற்றம் தருவனவாம். அங்ஙனம் உணர்தற்கும் உணர்ந்ததைப் பிறருக்கு உணர்த்துதற்கும் கருவி மொழியாகும். சமூக வாழ்க்கையையுடைய மக்கட்கு மொழி எத்துணை அவசியமானதென்பதும் அம்மொழியால் அவரடையும் பயனும் இங்கு அதிகமாக யான் விரித்துரைத்தல் வேண்டுவனவல்ல. நம்மொழியில் அந்நிலையில் நிற்பது இயற்றமிழாதல் வெள்ளிடைமலை. இவ்வியற்றமிழ், இசைநாடகங்களிற் கலத்தல் மேலே கூறப்பட்டது. இசைத்தமிழில்வரும் பாட்டும் நாடகத்தமிழில்வரும் பாட்டும் உரையும் இயற்றமிழ்ச் சொற்கொண்டேயாதலின் அங்ஙனம் கூறப்படுவதாயிற்று. எனவே அவ்விசைநாடகங்களுக்குக் கவிசெய்வோன் அவ்விரண்டு தமிழுடன் இயற்றமிழும் வல்லானாக இருத்தல் வேண்டும். அன்றியும், அவ்விசை நாடகத்தமிழ் கூறும் நூல்களும் இயற்றமிழே. அப்பெயர்களும் இயற்றமிழேயாம். மற்றும் தமிழென்பது பொதுவாக மூன்று தமிழையும் அடக்கி நிற்பினும் சிறப்பாக இயற்றமிழையே குறித்து நிற்கும். இவ்வாற்றால் இயற்றமிழ் ஏனையிரண்டு தமிழினும் சிறந்து தனித்தும் அவற்றில் உயிர்போலக் கலந்தும் நிற்குந் தன்மையையுடையதென்பதை உணரலாம்!

இவ்வியற்றமிழ், எழுத்தும் சொல்லும் பொருளுமென்று மூன்று பகுதிகளையுடையது. இம்மூன்றிலக்கணத்தோடு யாப்பிலக்கணத்தை வேறாகக்கூட்டி நான்கென்றும் அணியிலக்கணத்தை அவ்வாறுகூட்டி ஐந்தென்றும் வழங்குவதும் உண்டு. சங்ககாலத்தும் அதனையடுத்தும் பிற்காலத்தும் தோன்றிய தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கணங்களும் எட்டுத்தொகை முதலியனவும் ஐம்பெருங்காப்பியங்களும் கம்பராமாயணம் முதலியனவும் பலவகைப் பிரபந்தங்களும் பல்வேறு உரைநடைகளும் அவைபோன்ற பிறவும் இவ்வியற்றமிழ் நூல்களாம்.

இனி, இவ்வியற்றமிழ் பண்டு பல்துறைகளிலும் வளர்க்கப்பட்டு உயர்நிலையெய்தியிருந்தவாறும் இப்பொழுது அதன் வளர்ச்சி குறித்து

தொடர்ச்சி 4-ம் பக்கம்

"வாசகனின்" அவகோலம்

எம். சிவபாலன்

இதமாதம் 7-ந் தேதி "இந்துசாதனத்"திலே பிரசுரமான "சங்கீதமும் சமயமாற்றமும்" எனும் கட்டுரையைக் கண்ணுற்று கிறிஸ்தவ நண்பரொருவர் "வாசகன்" என்னும் புனைபெயருடன் சென்றமாசம் 11-ந் தேதி "சத்தியவேதபாதுகாவலனி"ற் சில ஆட்சேபங்களை நிகழ்த்தியுள்ளார்.

அவர் சொல்வது போல சமயவிஷயமாய் நான் ஒரு சிறுபாலன் தான். இதில் சந்தேகமில்லை. சமயத்தில்—அதுவும் சைவம்போன்ற அகண்ட பரிபூரணமான ஓர் சமயத்தில்—பழுத்தகிழவன் என்று சொல்லிக்கொள்ளும் அதிகப் பிரசங்கித்தனம் நமக்கு வேண்டாம். நாம் ஏதோ 'மாட்டாமல் மாட்டிக்கொண்'டிருப்பதாகக் குறிப்பிட்டு "அது விவேக சாதுரியமான ஒரு அருஞ்செயல் ஐயா!" என்று வியக்கிறார். "அவ்வளவு விவேக சாதுரியமான அருஞ் செயலொன்றைச் செய்துவிட்டோமே!" என்று நாமும் வியக்கிறோம்; மனச்சாந்தி படைகிறோம்.

மெய்யான சமயம் எது, பொய்யான சமயம் எது என்பதை நான்கு வினாக்கள் கேட்டுவிட்டால் தெரிந்துவிடும் என்பதாக வாசகன் அபிப்பிராயப்படுகிறார். அதே நான்கு வினாக்களையே நாமும் திருப்பி அவரிடம் கேட்கிறோம்; இதற்கு அவர் கொடுக்கும் பதிலிலிருந்தே இவ்விஷயத்தை நாம் மேற்கொண்டு ஆராயவேண்டியது. "தவறுகளைக் கண்டிப்பதற்கு அதிகாரம் பெற்றவர் உண்டா?" என்று கேட்கிறார். யாரிடம் அதிகாரம் பெற்றவர்? கிறிஸ்தவர் குறிப்பிடுவது போல, கேவலம், பாபிகளாகிய மனிதர்களிடமிருந்தா? அல்லது பரிபூரணமான தேவனிடமிருந்தா? இதையும் வாசகன் விளக்குவாராக.

கட்டுரை எழுதியது, சங்கீதம் கற்றுவிட்டதை உலகிற்குக் காட்டிக்கொள்ள நாம் செய்தசூழ்ச்சி என்று தமக்குப் புலப்படுகிறதாகத் துப்பறிகிறார் வாசகன். அது நம்குற்றமாகாது. அவர் புலன்கள் அவரை வஞ்சித்துவிட்டன என்று தான் சொல்லவேண்டும்.

கத்தோலிக்க சமயத்தில் "பாவ விக்யாபனம்" எனும் சொல்லு வழக்கிலில்லை என்று குறிப்பிடுகிறார். உண்மை. பாவசங்கீர்த்தனம் என்று சொல்லிக் கொள்ளுவார்கள். ஆனால், நாம் வேண்டுமென்றே பாவ விக்யாபனம் என்று வரைந்தோம். சங்கீர்த்தனம் என்றால் புகழ்ச்சி என்பது பொருள். இப்பொருளையே அச்சொல்லுக்குப் பல அகராதிகள் தருகின்றன. முக்கியமாக ஆறுமுகநாவலரின் மாணாக்கரின் மாணாக்கர் வித்வான் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் தமிழ் மொழியகராதி 'புகழ்ச்சி' யென்ற ஒரு அர்த்தத்தையே குறிப்பிடுகிறது. ஆகவே, 'பாவசங்கீர்த்தனம்' என்றால 'பாவப் புகழ்ச்சி' யென்றாகும். பாவத்தைப் புகழ்வது எத்தனை அபத்தம் என்பதைக் கத்தோலிக்க சமூகத்தார் அறியமுடியாததன். சமீபகாலத்தெழுந்த சில அகராதிகளில சங்கீர்த்தனம் எனும் சொல்லுக்குப் 'பாவ அறிக்கை' என்னும் பொருள் சேர்க்கப்பெற்றிருக்கிறது. பாவசங்கீர்த்தனம் என்றால அது 'பாவ—பாவ அறிக்கை'என்றாகும். அதாவது பாவமானபாவஅறிக்கை; பாவமான வழியில் பாவ அறிக்கை செய்துகொள்வது. பாவ அறிக்கை செய்யவேண்டியதானால் நாம் பாவத்தை மன்னிக்கக்கூடிய தேவனிடத்தில் அறிக்கையிடவேண்டும். இதைவிடுத்து நம்மைப்போன்ற இன்னோர் பாவிமனிதனிடத்தே அறிக்கையிடுவதும், தமக்கே ஈடேற்ற [illegible] அப்பாவி மனிதன் தேவனுகும் அறிக்கையிடுவோனுக்குமிடையே வக்கீல் தொழிலில் சம்பாதிப்பதும் இதைக்கண்டு ஆதரவடைவதும் எமது கொள்கையல்ல.

ஏனைய கத்தோலிக்கர்கள் செய்வதுபோல நாமும் 'பாவப்புகழ்ச்சி' செய்யவில்லை என்பதையே—உண்மையில் பாவவிண்ணப்பமே, பாவ அறிக்கையே செய்து அநுதபித்தோம் என்பதையே—விக்யாபனம் என்ற சொல்லால் விளக்கினேம். இது விளங்காமல் வாசகன் 'சமயமணை' மூண்டா இல்லையா என்று ஆராய்ச்சியில் ஈடுபட்டு முடிவுகண்டது அனுதாபத்திற் குரியது!

இல்லத்தின் கலந்த பிரார்த்தனைகளை முணுமுணுத்துக் காட்டும்படி கெஞ்சுகிறார். முணுமுணுப்பானேன்; இரைந்தே சொல்லுகிறோம். "நான் ஜபித்துக் கொள்ளும் பிரார்த்தனையில் என்ன பாஷை கலந்திருக்கிறது, அதன் அர்த்தம் என்ன என்ற விஷயம் எனக்குத் தெரியவில்லை. கண்மூடித்தனமாக, புரிகிறதோ புரியவில்லையோ உளறித் தீர்க்கிறேன். தயவுசெய்து தாங்கள் சொல்லுங்கள்" என்று வாசகன் நம்மைக் கேட்கும் பட்சத்தில் நாமும் தெரிந்ததைச் சொல்லாமலிருப்பது நியாயமில்லை. அதிகம் போவானேன்? தம்பிரார்த்தனையின் அந்தத்திலுள்ள 'ஆமென்' எனும் சொல் இலத்தினில் இருந்து வந்ததா இல்லையா என்பதை வாசகன் முதலில் நிர்ணயிக்கட்டும். அப்புறம் பார்ப்போம்.

"'மாலை யுருட்டினேன்' என்பதே செபமாலை என்பதை உனக்கு வழக்கமில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு," என்று அழுது வடிகிறார் வாசகன். நாம் கிறிஸ்தவனுயிருந்தபோது எம்மைச் 'செபமாலை' எனும் பெயராலேயே அழைத்தார்கள் என்பதைச் சொல்ல முன்வந்தால் நிச்சயம் வாசகனின் முகம் அசடு தட்டும். வாசகன் வெறுமனே வாயால் மட்டும் "செபமாலை, செபமாலை" என்று சொல்லியிருப்பார். ஆனால் நாமோ 'செபமாலை' என்று எத்தனையோ தடவை கையொப்பமிட்ட காலமுமுண்டு. இவ்வளவுதாம், எம்வரையில், வழக்கிலிருந்த ஓர் சொல்லை ஆதாரமாகக் கொண்டு "செபமாலையுருட்டினேன்' என்று சொல்லாமல் வெறுமனே 'மாலையுருட்டினேன்' என்று சொல்லுகிறபடியால் நீ கத்தோலிக்கனுயிருந்திருக்க முடியாது" என்று வாசகன் தம் மகத்தான ஆராய்ச்சியின் பின் முடிவுகட்டுவது புத்தியின்பாற்படாது.

"அர்த்தனை குருவின் அர்ச்சேலியார் பக்தியைப் பற்றி வாசகன் எழுதுகிறார். அதை நாம் படிக்கவில்லை. அச்சம்பவம் உண்மையா, கற்பனையா என்பதை நாமறியோம். ஆனால் இங்கு உண்மையாக நடைபெறும் சில விஷயங்களை, வாசகன் நேரில் வந்தால் காட்டி நிரூபிப்போம். எத்தனை கிறிஸ்தவர்கள் பிழைப்புக்காகப் போதகருக்கும், குருமாருக்கும் பயந்துகொண்டு, ஞான சைவத்திலுள்ள அபார நம்பிக்கையால் தூண்டப்பெற்று இந்து சமயக் கோயில்களில் அர்ச்சனையும், பூசையும் செய்விக்கிறார்கள்; நேர்த்தி சமர்ப்பிக்கிறார்கள். இவர்கள் எல்லாம் உண்மைக் கிறிஸ்தவர்களா? வேஷதாரிகள்!

இத்தகைய வேஷதாரிகள், பிழைப்புப் பித்தர்கள், இத்தகைய நேர்மையற்றவர்கள் சத்திய சந்தான, கருணைக் கடலான, யேசு பெருமானைப் பின்பற்றுகிறோம் என்று நடிக்க ஆரம்பித்ததினாலேயே இப்பொழுது இவ்வுலகம் பயங்கரமான நிலைமை அடையலாயிற்று.

கிறிஸ்துமதம் பரக்கப் பரம்பிய ஐரோப்பாவின் இன்றைய நிலை

தொடர்ச்சி 3-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுஹூ புரட்டாதிமீ ௧௫உ வியாழக்கிழமை

யுத்த நிலை

ஸ்டாலின்கிருட் யுத்த நிகழ்ச்சியையிட்டுச் சிலநாட்களாக வந்த தந்திச் சமாசாரங்கள் ருஷியருக்கு மாத்திரமல்லாமல் ஐக்கிய தத்துவ ராச்சியத்தினராகிய பிருத்தானியர் அமெரிக்கர்களுக்கும் அவர்கட்குக் கீழ்ப்பட்ட பிரசைகட்கும் மகிழ்ச்சியையும் உள்ளக்கிளர்ச்சியையும் அளிப்பனவாக விருந்தன. ஆனால் நேற்றின்று வந்த சமாசாரங்கள் அவ்வளவு விரும்பத் தக்கனவாகப் புலப்படவில்லையெனலாம். மாரிக்காலம் சமீபித்துவிட்டதென்ற அச்சத்தினால் உந்தப்பட்ட ஜர்மனியர் பத்து லட்சக் கணக்கான சைனியத்தையும் பன்னூற்றுக்கணக்கான தாங்கிகளையும் ஸ்டாலின்கிருட்டிற் புகுத்திக் கோரமான யுத்தஞ் செய்வதோடமையாது தங்கள் ஆகாயப் படைகளையும் குறித்த பட்டினத்தின்மீது வரைவின்றி இடைவிடாது குண்டுமாரிசெய்யப் பணித்திருக்கிறார்கள். எல்லா வகையான யுத்தமும் ஏககாலத்திலேயே நடக்கின்றவாம். நாற்பது தினங்களுக்கு மேற்பட ஓரே தொடர்பாகத் தம ஆருயிரைத்தானும் பொருட்படுத்தாத வீரத்தோடும் கோரத்தோடுங் கூடி நிர்வகித்து நின்று சமர்புரிந்த ருஷிய சைனியம், "அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்றாங்கு, தம் நிலை தளர்ந்து வெந்திடுகின்றனவாம். இப்பொழுது நடக்கும் கோரமான யுத்தம் ஸ்டாலின்கிருட்டின் முன்னெப்போதேனும் நடந்ததில்லை யென்று சொல்லப்படுகின்றது; தீமோஷெங்கோ என்னும் ருஷிய சேனாபதி இப்பொழுதும் மனந் தளராதவராய் வேற்றிடங்களிற் பகைவரைத் தாக்கி நிற்கின்றாராம். ஸ்டாலின் கிருட் தெருவீதிகள் தோறும் தனித்தனி சமர் நடக்கின்றதாம். ஜர்மனியருக்குரிய ஆயிரம் ஆகாயப் படைகள் ஸ்டாலின்கிருட் நகர்மீது தினமும் வெடிகுண்டு பெய்தபடி பறந்து திரிகின்றனவாம். இப்படியான கஷ்டங்களையும் சேதங்களையும் பட்டுக்கொண்டு சமர்புரியும் ருஷியரை எவராயினும் மெச்சாமலிருக்க முடியாதென்பது மெய்; ஸ்டாலின் கிருட்டின் கதி யென்னாகுமோ வென்பதை அறிதற்கு நாம் பல நாட்களை எதிர் பார்த்திருக்க வேண்டிய தில்லையெனலாம்.

ருஷிய யுத்த விஷயம் இவ்வாறாக, இந்த ஆண்டுதான் முடிந்தாலும் இந்தக் கொடிய உலக யுத்தம் இப்போதைக்கு முடியப்போவதில்லையென் றெண்ணி நாம் அஞ்சவேண்டியிருக்கின்றது. பிருத்தானிய சேனாபதியாகிய உவேவல் என்பவர் அடுத்துவரும் 1943ம் ஆண்டில் நடக்கவிருக்கும் யுத்தமுயற்சிகளைப்பற்றியும் பகைவர் கொண்டுள்ள நோக்கங்களைப் பற்றியும் பிருத்தானியர் அமெரிக்கர் செய்யவேண்டிய ஆயத்தங்களைப்பற்றியும் இப்பொழுது ஒருவாறு வெளியிடுகின்றார். ஜப்பானியர் சென்ற மே மாசத்தில் பர்மா நாட்டைக் கைப்பற்றியபின் அதிக வெற்றியடையவில்லை யென்றும் ஜப்பானிய ஆகாயப்படை அதிக பெலமுடையதல்லவென்றும் குறித்த சேனாபதி கூறுகின்றார். ஜர்மனியரைப்பற்றிச்சொல்லுமிடத்தில், எகிப்து நாடு, பாலஸ்தீனம், சிரியா முதலிய நாடுகளுக்கூடாகப் படையெடுத்துக் காக்கேசிய மலைப் பிரதேசத்தையேனும், இல்லையேல் தருக்கி, பேர்ஷியா, ஈருக் முதலிய நாடுகளுக்கூடாகப் படையெடுத்துக் கிழக்குப் பக்கத்தையேனும் தாக்கும் நோக்கம் ஜர்மனியரிடத்துண்டென்றும் தெரிவிக்கின்றார். ஜர்மனியர் இந்த நோக்கத்தில் அதிக அநுகூலமுறுவிட்டாலும் பிருத்தானிய அமெரிக்கர் போதிய ஆயத்தங்களோடு அடுத்த ஆண்டிற் பகைவருடைய எதிர்ப்பையும் படையெடுப்பையும் நிச்சயமாக எதிர்பார்த்திருக்க வேண்டுமென்றும் உவேவல் சேனாபதி எச்சரிக்கின்றார். மேலும் யுத்தம் எவ்வளவு காலத்திற்கு நீடித்து இழுபடுகிறதோ அவ்வளவு காலமும் பிருத்தானிய அமெரிக்கருக்குப் போதிய யுத்த ஆயத்தங்களைச் செய்தற்கு வாய்த்த காலமாதலால் யுத்தம்இழுபடுவது நல்லதென்றும் குறித்த சேனாபதி தெரிவிக்கின்றார். இவைகளையெல்லாம் உற்றுநோக்குமிடத்து இந்த ஆண்டில் இந்தப் பொல்லாத சமர் முடியப் போவதில்லையெனவும் அடுத்த ஆண்டிலும் இது நடக்குமெனவும் இதனால் உலகிற்கு இன்னமும் பல அநர்த்தங்கள் நேருமெனவும் யூகிக்கக் கிடக்கின்றனவென்பதாம்.

பட்டினசங்கப் புதிய தலைவர்

யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சங்கத் தலைவராகச் சென்ற வாரம் தேர்தல் செய்யப் பெற்ற பிறக்ரர் திரு. K. ஐயாத்துரை யவர்கள் இப்பட்டின வாசிகட்குப் புதியரல்லர். இவர் இப்பட்டின சங்கத்தின் வட்டாரப் பிரதிநிதியாக விருந்து கடமை யாற்றியதோடமையாது, முன்னர் இச்சங்கத்தின் உபதலைவராகவு மிருந்து பட்டினவாசிகளுக்குத் தொண்டாற்றியவர். இவர் ஆங்கிலத்தில் மாத்திரமன்றித் தமிழிலும் பாலபண்டித பரீட்சையிற் சித்திபெற்றுப் போதிய தமிழறிவுமுடையவர். அபிமானம் பூண்டவர்; தெய்வபக்தி யுடையவர். சென்ற சிலமாசமாக இப்பட்டின சங்கம் அபிப்பிராய பேதங்கொண்டு பிணக்குற்றுச் செயலற்றுப் பயனற்றுக் கிடந்ததை இப்பட்டினவாசிகளாகிய நாங்களறிந்து உணர்வோம். ஆனால், திரு. ஐயாத்துரை யவர்கள் இனியேனும் இவ்வகையான இடையூறுகள் இச்சங்கத்தில் நேராவண்ணம் தடுத்து, வட்டாரப் பிரதிநிதிகளாகிய அங்கத்தினர்க்கிடையே எவ்வகையான பிணக்கும் வேற்றுமையும் மூளாவண்ணம் தவிர்த்து, பிரதிநிதிகளின் அபிமானத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றுத் தமது தலைமையில் இப்பட்டின பரிபாலனத்தை இனிது நடத்துவரென்று பட்டினவாசிகள் எவரும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

தாயும் நான்கு குழந்தைகளும்

கொல்லப்பட்டிருந்த கோரம்

காலி செப் 27—

நேற்று அதிகாலையில் எத்திலி கொடையிலுள்ள ஓர் வீட்டிற்குள்ளும் அதைச்சுற்றியும் ஒரு தாயாரினதும் நாலு குழந்தைகளினதும் பிரேதங்கள் காணப்பட்டன. வளவிற்குள் காணப்பட்ட லோலினை என்னும் தாயாரின் தேகத்தில் 16 குத்துக்காயங்கள் காணப்பட்டன.

ஆரியவதி[6] நோனே [4] என்னும் இரு சிறுமிகளும் கைக்குழந்தையும் வீட்டிற்குள் குத்திக் கொல்லப்பட்டிருந்தனர், வீட்டிலிருந்து ஐம்பது கெஜ தூரத்தில ஆரியரத்னவின பிரேதம் கிடந்தது.

ஸ்திரீ வீட்டிற்குள் குத்தப்பட்டு வெளியே ஓடுகையில் விழுந்து இறந்திருக்கவேண்டும். ஆரியரத்னவும் வெளியே ஓடுகையில் இறந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது.

இறந்த ஸ்திரீயின் மாமியாரும் ஜோன், ஹமாமானிஸ் ஜீரின்ஸ்(மைத்துனர்கள் ஆகியோரும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம்கலாநிலையம்

ஆராய்ச்சி விரிவுரை

குலசேகரன் பட்டினம் 'திருவருளவகம்' திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள் "கனவியல் மாண்பு" என்னும் பொருள்பற்றி வெள்ளிக்கிழமை (2-10-42) பிற்பகல் 5½ மணிக்கு கலாநிலைய மண்டபத்தில் ஒரு விரிவுரை நிகழ்த்துவார்கள்.

பிழை திருத்தம்

இப்பத்திரிகையின் 1-ம் பக்கத்தில் 5-ம் கலத்தில் நான்காம வரியிலுள்ள இயற்றமிழ் என்ற சொல்லின் பின், வரவேண்டிய 4-ம் கலத்தின கீழ்ப்பகுதியிலுள்ள "இசைத்தமிழ்........... சிறப்பாக உரியன" என்னும் பகுதி தவறுதலாக அங்கு சேர்க்கப்பட்டு விட்டது. அதனை வாசகர்கள் அன்புடன் திருத்திப் படித்துக் கொள்வார்களாக.

⁂

இப்பத்திரிகையின் சென்ற இதழில் வெளியான "திருக்கோவையாரின் உவமைச்சிறப்புகள்" என்னும் விரிவுரைச் சுருக்கத்தில் 4-ம் பத்தில் 9-ம் வகையில் இரண்டாம் பந்தியில் 8-ம் வரியில் "விபரீத உவமையை 16-ம் செய்யுளிலும்" என விருப்பதை "விபரீத உவமையை 162-ம் செய்யுளிலும்" எனத் திருத்திக்கொள்க.

மனைவியை உலக்கையால் அடித்துக் கொன்றவர்

தாமும் தற்கொலை செய்து கொண்டார்

தங்காலை செப் 27—

கதிரகொடை வாசியொருவர் தமது மனைவியைத் தடியால் தாக்கிக்கொன்ற பின்னர் தாமும் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டாரென்று கூறப்படுகிறது.

ஆர். அப்புஹாமி என்பவரும் அவரின் மனைவி டபளியூ. டிலின் சிஞ்ஞோயும் அடிக்கடி சண்டையிட்டுக்கொள்வதுண்டு, சம்பவம் நடந்த தினத்தன்று தகராறு ஏற்பட்டபொழுது அப்புஹாமி மனைவியை ஒரு உலக்கையால் அடித்து வீழ்த்திவிட்டு வெளியே சென்றார்.

திரும்பிவந்த பொழுது தமது மனைவி இறந்துகிடக்கக் கண்டார். இச்செயலுக்கு மரண தண்டனை கட்டாயமாக விதிக்கப்படுமென்று அயலவர் அவருக்குக் கூறினர். அப்புஹாமி அறைக்குட் சென்று இருதயத்தையூடுருவிச்செல்லத் துப்பாக்கியால் சுட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

எங்கள் அபிமானிகட்கு ஒரு நல்வார்த்தை

பணமுட்டு, பொருள்முட்டு என்னுமிவைகள் நேர்ந்துள்ள இந்த நேரத்திலும் எங்கள் பத்திரிகைப் பிரசுரங்களைத் தத்தம் சொந்தப் பத்திரிகைகள் போலப் பாராட்டி அபிமானித்துப் பொருளுதவி செய்து வரும் பத்திராபிமானிகளுக்கு நன்றிகூறி அவர்களைப் பாராட்டாமலிருக்க முடியாதாகும். இன்னமும் பத்திரிகாபிமானிகளாகவுள்ளவர்களுள் சிலர் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைப் பாக்கியில்லாமலும் முற்பணமாகவும் எமக்குச் செலுத்தி வைப்பரேல் அவர்கள் இந்தத் தரும கைங்கரியத்திற்குப் பெருந்துணை செய்தவர்களாவர். சென்ற மாசந் தொடக்கமாக அநேக புதிய அபிமானிகட்குப் பத்திரிகைப் பிரசுரங்களை அனுப்பி வரலானோம்; அவர்களுட் பலர் எங்கள் வேண்டுகோட்கிசைந்து பத்திரிகைகளை ஏற்றுக்கொண்டனர், சில அபிமானிகள் அப்படி ஏற்றுக்கொண்டு பத்திரக்கிரயத்தையும் முற்பணமாகச் செலுத்தி வரலாயினர். இதுகாறும் அங்ஙனம் பத்திரக் கிரயத்தைச் செலுத்தி வைக்காதவர்கள் இந்த அக்டோபர் மாசம் 10-ந் தேதிக்குள் தங்கள் பத்திரக் கிரயத்தைச் செலுத்தி வைப்பரேல், அப்படிச் செய்தல் எங்கட்குப் பல்லாற்றானும் பெரும் உதவியாகுமென்பதை அவர்கட்கு விநயத்துடன் தெரிவிக்கின்றோம்.

மனேஜர்.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்)

அப்படியும் பலர்

இப்படியுஞ் சிலர்

சுந்தரேசுவரி அன்று பகல் நடந்த விஷயம் முழுவதையும் மாலைக்காலத்தில் தன்தாய் தனியேயிருக்குஞ் சமயம் பார்த்து, அவளுக்குச் சொன்னாள்; கேட்ட சிவகாமித்தாய் பெரிதும் கவலைப்பட்டாள்; "இந்தச் செய்தி சின்னம்மாள் பிள்ளைகளின் காதிலும் பட்டுவிட்டதா; அவர்கள் இதைப்பற்றி அறிந்திருக்கின்றார்கள் என்றது எனக்கு இப்பொழுதுதானே தெரியவந்தது; ஐயோ, பாவம், மகளே, அப்படியானால் அவர்கள் கவலைப்படுவார்களே, ஆர் மனம் வருந்தினாலும் அந்த நகுலன் மனம் வருந்துவதை நானுஞ் சகிக்க மாட்டேனே! என் கண்ணே, சுந்தரம், நாளை பள்ளிக்கூடத்திற்கு அந்தப் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போகும்போது ஒன்றுக்குங் கவலைப்படவேண்டாமென்றும் நான் சனிக்கிழமை மத்தியானத்தின் மேல் அவர்கள் வீட்டிற்கு நிச்சயமாக வருவேனென்றும் நான் சொன்னதாக நகுலத்திற்கு நீ இரகசியமாகத் தெரிவித்துவிடு; அந்தப்பிள்ளை மனம வருந்தினால் நாங்கள் நல்லாயிருக்க முடியாது..." என்று சிவகாமித்தாய் மகளிடத்தில் சொல்லிக்கொண்டிருக்கும்போது, "தங்கைச்சி" என்று சிதம்பரப்பிள்ளை தலைவாசலிலிருந்து கூப்பிடுஞ் சத்தங் கேட்க, "அம்மா, ஐயா என்னைக் கூப்பிடுகிறார்" என்று சொல்லிவிட்டுச் சுந்தரேசுவரி தலைவாசற் பக்கமாகச் சென்றாள். மகள் வரக்கண்ட தகப்பன் "தங்கைச்சி," உங்கள் அம்மாவை இப்படி வரச்சொல்லு" என்று சொல்ல, மகள் உடனே போய்த் தாயிடந் தெரிவிக்க, தாய் தலைவாசற் பக்கமாக வந்தபோது அங்கே முருகரம்மானும் இருப்பதைக் கண்டாள். "உன்னைத்தான் கண்டுகொண்டு போக வந்திருக்கிறார்; எங்களுக்காக அம்மான் அதிக சிரமப்படுகிறார்; தம்பியின் கருமத்தை நிறைவேற்றுமுன் எங்கள் தங்கைச்சியின் கருமத்தையே முந்தி நிறைவேற்ற வேண்டுமென்று நான் அம்மானிடம் அன்று வந்தபோது சொல்லியிருந்தேன்; அவர் இப்பொழுது இரண்டு தக்க இடத்திலே சம்பந்தம் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்; எது உன் மனசுக்குப் பொருத்தமோ அதை ஆராய்ந்து சொன்னால் இந்தப் புரட்டாதி போக ஐப்பசியில் முதன் முதல் வரும் நல்ல முகூர்த்தம் பார்த்துச் செய்து வைக்கலாமாம்; அதுதானடியப்பா, உன் யோசனையைச் சொல்லு, அம்மானிடத்திலே கேட்கவேண்டியதை நேரே கேட்டுக்கொள், அறியவேண்டியவைகளை அறிந்துகொள், விசாரிக்க வேண்டியதை விசாரித்துக் கொள், பிறகு என்னைக் குற்றஞ் சொல்லாதே, என்மேற் பழி போடாதே, உனக்குச் சம்மதமானால் எல்லாம் எனக்குஞ் சம்மதந்தான்" என்று சிதம்பரப்பிள்ளை சொல்லி முடித்தார். "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்; உங்களெண்ணத்திற்கு நான் இணங்கி நடப்பதல்லாமல் என் எண்ணத்திற்கு நீங்கள் நடப்பதா? அது முறையோ? உங்களுக்குச் சம்மதமானால் எனக்குஞ் சம்மதந்தானே' என்று சிவகாமித்தாய் சொல்லிவிட்டு, "ஏன், அம்மான், நான் சொல்லுவது நியாயந்தானே" என்று முருகரைப் பார்த்துக் கேட்டாள். "பிள்ளை சொல்லுவது முழுதுஞ் சரி, ஆனால் ஐயா கேட்டதும் பிழையல்ல, தங்கைச்சி, இந்தக் காலத்திலே, எங்கேனும் நான் சடங்கு சம்பந்தம் பேசிக்கொண்டு போனால், வீட்டிலேயுள்ள ஆணாய்ப் பிறந்தவர் தம்முடைய மனைவியின் சம்மதத்தைக் கேட்டுத்தான் எதற்கும் முற்றுச்சொல்ல முடியுமென்று சொல்வது வழக்கம்; அதன்படிதான் ஐயா உம்மை இப்பொழுது கேட்டார்போலும்; நீர் உங்கள் குலங் குண உயர்ச்சிக்குத் தக்கபடி ஐயாவின் சம்மதந்தான் உங்கள் சம்மதம், கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி என்ற முறையில் நடக்கிறீர்; உலகத்திலேயுள்ள பெண்கள் அப்படியும் பலருண்டு, இப்படியுஞ் சிலருண்டு; என்றாலும் இப்படியான கருமத்தில் உம்மையும் உசாவித்தானே இவர் எதையுஞ் செய்யவேண்டும்" என்று வெகு சாதுரியமாக முருகர் பதில் சொன்னார்.

கையில் வெண்ணெயிருக்க நெய் தேடுவதா?

"அது சரிதான் அம்மான், இந்தக் காலத்திலே சம்பந்தம் பேசுவதும் நிச்சயிப்பதும் செய்து வைப்பதும் பெற்றோர்களில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை, பிள்ளைகளின் சம்மதத்தையும் பொறுத்துத்தான் இருக்கின்றன. ஆனதால் எங்கள்பிள்ளையின் நோக்கத்தையும் நாங்கள் அறிந்துதான் இப்படியான கருமத்தில் தலையிடவேணும்; எங்கள் மகளினிலோ தான் இன்னமும் படிக்க வேண்டுமென்ற நோக்கங் கொண்டிருக்கிறாள்; அல்லாமலும் தன் தமயனுக்கு ஏதுங் கல்யாணம் நிறைவேறின பிறகுதான் தான் எதற்குஞ் சம்மதிப்பதென்ற எண்ணம் அவளுக்குண்டென்பதை நான் இடையில் அறிந்தேன், ஆனதால் நாங்கள் எங்கள் மகளுடைய நோக்கத்தை மெல்ல அறிந்து சொல்லுகிறோம்; இன்னும் நாலைந்து நாட்கழித்து வாருங்கள், அம்மான்" என்று சிவகாமித்தாய் முருகருக்குச் சொன்னாள். தம் மனைவி சொன்ன பதில் சிதம்பரப்பிள்ளைக்கு அகத்தில் அதிக விருப்பமில்லையாயினும், புறத்தே அதனைக் காட்டாதவராய், "அப்படித்தான் செய்யுங்கள் அம்மான், வருகிற வியாழக்கிழமை வரையில் இந்தப் பக்கமாகத் தயவு செய்து வந்து போங்கள்" என்று அவர் முருகருக்குச் சொல்லி விடைகொடுத்துப் போகச் செய்து விட்டுத் தம் மனையாளைப் பார்த்து "ஏன், தங்கைச்சிக்குத் தமயனுடைய கருமம் ஒழுங்கான பின் தான் என்ற அப்படியான கருத்துண்டோ" என்று மெல்ல வினவ, அவள் "அப்படியென்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது, எங்கள் பிள்ளைக்குத் தான் இன்னமும் நன்றாய்ப் படிக்க வேண்டுமென்ற ஆசையுண்டு; தனக்கு ஒரு நன்மையான கருமம் நடக்கும்போது தன் தமயனும் மனைவியும் நின்று நடத்த வேண்டுமென்ற விருப்பமும் தங்கைச்சியிடத்தில் இருக்கக்கூடும்; அப்படி நினைப்பதனால் ஒரு பிழையுமில்லையே" என்று இதமாகச் சொன்னாள்; "அது சரிதான், ஆனால் எங்கள் மகளுடைய கருமத்தை முடித்துக்கொண்டுதான் மகன் விஷயத்தில் முயற்சி செய்யவேண்டுமென்று நீயே முந்தி எனக்குச் சொன்ன ஞாபகமுண்டு, ஆனதாற்றான் மகளுடைய கருமத்தை முந்திப் பார்த்துக்கொண்டு எங்கள் மகனுக்கு முருகேசபிள்ளை வீட்டுப் பெண்ணைக் கல்யாணஞ் செய்து வைக்கலாமென்றெண்ணி முருகரிடத்தில் ஒரு கல்யாணம் பேசியொழுங்குபண்ணச் சொன்னேன் அவர் இப்பொழுது பேசிக்கொண்டு வந்தார்; வந்தவிடத்தில் இப்படியாயஞ் சொன்னால் எங்கள் பிள்ளைகளின கல்யாணம் பிள்ளையாருடைய கல்யாணம் போலத்தான நேருமென்று நினைக்கிறேன்; சரி, அதைப்பற்றிக் காரியமில்லை, எங்கள் தங்கைச்சியின் விருப்பத்தையும் அவளிடம் கேட்டறிந்து சொல்லு" என்று சிதம்பரப்பிள்ளை சிறிது கடுகடுத்துச் சொன்னார். சிவகாமித்தாய் "ஓம், என்று சொல்லி விட்டு வீட்டின் உட்பக்கம் சென்று தன் மகளைத் தனியான ஒரு அறையுள் இட்டுச் சென்று அவளை இருத்தித் தானும் உடன் இருந்து கொண்டு "கண்ணே, உங்கள் ஐயாவை நாங்கள் அதிக கவலைப்பட விடவொண்ணாது, உனக்குக் கல்யாணம் பேசி வருகிறார்கள், எங்கள் நோக்கம் ஒருபக்க மிருக்க உன்னுடைய எண்ணம் என்னடியம்மா, உள்ளதைச் சொல்லு, நீ இன்னமும் சின்னவளல்லவே" என்று ஆதரவுடன் கேட்டாள். "அம்மா, உங்கள் நோக்கத்தை விட எனக்கு வேறாக ஒரு நோக்கமில்லையம்மா, முதல் அண்ணனுடைய கருமம் கைகூடட்டும்; எனக்கு இப்பொழுது அவசியமில்லையம்மா; அல்லாமலும் நாங்கள் இரண்டே பிரண்டு சகோதரங்களதாம் இருக்கிறோம்; அண்ணா ஒரு குடும்பத்துட் போக நான இன்னொரு குடும்பத்துட் புகுதல் புத்தியல்ல என்று எண்ணுகிறேனம்மா, எல்லாமறிந்த உங்களுக்கு நான் எதுஞ் சொல்வது முறையல்ல அம்மா; அண்ணன் புகும் குடும்பத்திலேயே நானும் புகத்தக்கதாக விருக்க, கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய் தேடுவார் போல, வேறு இடங்களில் என்னம்மா கல்யாணம் பேசி அலைவான்" என்று தன் தாயிடம் சுந்தரேசுவரி பன்னினாள். தன் மகளின் வார்த்தையைக் கேட்ட சிவகாமித்தாய் சிறிது பயந்தாள்; மகளுக்கும் இப்படியான எண்ணமிருக்கின்றதென்பதைத் தாய் அதுவரையில் அறியாள்; தனக்கு அச்சம்பந்தம் சம்மதமானாலும் தனது கணவன் உடன்படமாட்டாரென்பதைச் சிவகாமித்தாய் நன்கு அறிவாள். தன் மகன் மனம்மாறி நிற்றலையிட்டும் யோசித்தாள். தனது மகளுடைய மனக்கருத்தை இப்பொழுது தகப்பனிடஞ் சொல்லுவது புத்தியல்ல வென்று நிச்சயித்துக்கொண்டு சிவகாமித்தாய் அந்தநேரம் அவருக்கு ஏதுஞ் சொல்லாதொழிந்தாள்.

"துணையோடல்லது தனிவழியேகேல்"

இவை நிகழ்ந்து இரண்டு மூன்று தினம் சென்றபின் ஒருநாட் பிற்பகல் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு மீண்டுபோகும் சுந்தரேசுவரனை, முருகர் இடைவழியிற் சந்தித்து "தம்பி, ஒரு செய்தி" என்று மெல்லச் சொல்லுதலும் சுந்தரேசுவரன், குமாரசாமி முதலியோரை அவ்விடத்திற்றானே சற்று நேரம் நிற்க விடுத்து, தெருவோரத்தில் முருகருந் தானுமாகப் போய் நின்று "என்ன செய்தி அம்மான்" என்று வினவ, "வேறொன்றுமல்ல, தம்பி" இன்றைக்கும் அந்தப் பள்ளிக் கூடத்தில் பொழுதுபட ஆறுமணி தொடக்கம் பள்ளிக்கூடப் பிள்ளைகள் சங்கீதக் கச்சேரியும் வேறு சில நடிப்புகளும் நடத்துவார்களாம், அந்த நேரம் உம்மையும் தயவு செய்து வரும்படி அந்தப் பிள்ளை உமக்குத் தெரிவிக்கும்படி எனக்குச் சொல்லியது; ஆனதால் நீரும் அங்கே வந்தால் நல்லது" என்று சொன்னார். "எந்தப் பிள்ளை அம்மான், காஞ்சனமாலையா" என்று சுந்தரேசுவரன் கேட்க, "ஓம் தம்பி, அந்தப்பிள்ளைதான் நீர் தவறாமல் வரவேண்டுமென்று தெரிவிக்கும்படி என்னிடம் இரகசியமாக வழிக்குவழி சொல்லியது; அந்தப்பிள்ளை உம்மை ஆவலோடு எதிர்பார்த்திருப்பாள்" என்றார் முருகர். "அம்மான், எனக்குவரப் பிரியந்தான்; ஆனாலும் ஐயா அம்மா உத்தரவுதந்து விட்டாற்றான் வருவேன்" என்று சொல்லி முருகரைப் போகவிட்டுச் சுந்தரேசுவரன் குமாரசுவாமி முதலியோர் நிற்குமிடத்திற்கு மீண்டுவந்து அவர்களுடன் கூடிக்கொண்டு வழக்கம்போல தங்கள் வீடு சேர்ந்தான். ஆனால் குமாரசுவாமி முருகர் என்ன சொன்னாரென்று சுந்தரேசுவரனைக் கேட்கவுமில்லை; சுந்தரேசுவரன் சொல்லவுமில்லை. சுந்தரேசுவரன் வீட்டிற்குப் போனவுடனே முருகர் சொன்ன விஷயத்தைத் தன் தகப்பனுக்குச் சொல்ல அவர் சிறிது யோசித்து விட்டு, "தம்பி, நீ போக விரும்பினாற் போகலாம், நான் அந்த நேரத்தில் எங்கள் காரில் அனுப்பி வைக்கிறேன்; ஆனால் உங்கள் அம்மாவிடஞ் சொல்லி அம்மாவின் சம்மதத்தோடுதான் போய்வா" என்றார். அவன் உடனே முழு விஷயத்தையும் தாயிடம் போய்ச் சொல்ல, தாய் "அதற்கென்ன மகனே போகலாம், துணையோடல்லது தனி வழியேகேல் என்பது பெரியோர் வாக்கு, இராக்காலம், காரிலே போனாலும் உனக்குத் துணையாகக் குமாரசுவாமியையும் நான் சொன்னதாகச் சொல்லி உடன் கூட்டிக்கொண்டு போய்வா' என்றாள். சுந்தரேசுவரன் அப்படியே செய்வதற்கு உடன்பட்டான்; குறித்த நேரம் சமீபித்தலும், சுந்தரேசுவரன் மோட்டாரத்தைக் கொண்டுவரும்படி தங்கள் சாரதியாகிய கிருஷ்ணனிடஞ் சொல்ல, அவன் உடனே கொண்டுவர ஏறிக்கொண்டு குமாரசுவாமி வீட்டிற்குப் போய், அங்கே இறங்கிக் குமாரசுவாமியைக் கண்டு "அண்ணா, நான் சங்கீதக்கச்சேரி பார்க்கப் போகிறேன், எங்கள் அம்மா உம்மையுந் துணையாகக் கூட்டிக்கொண்டு போகும்படி சொன்னதால் இங்கே வந்தேன், வாரும் போய்வருவோம்' என்னும் குமாரசுவாமி "ஓம்" என்று சொல்லிவிட்டுத் தன் தாய்க்குத் தெரிவிக்க, தாயும் "இருவரும் ஒருவருக்கொருவர் துணையாகப் போய்வாருங்கள்" என்று சொல்லி விடைகொடுத்தாள். குமாரசுவாமி சுந்தரேசுவரனை அங்குள்ள மேசைமுன் னிருந்த நாற்காலியொன்றில் இருக்கச் செய்து, தங்கள் தாயாரை அவனுடன் பேசிக்கொண்டு நிற்க விடுத்து அறையுட்போய் உடையை மாற்றிக் கொண்டு வெளியே சுந்தரேசுவரன் இருக்குமிடத்திற்கு வந்தான்; அதற்கிடையில் கமலேசுவரி இரண்டு பாத்திரத்தில் பாலோ தேநீரோ காப்பியோ அறியேம், நிறைத்தபடி கொண்டுவந்து சுந்தரேசுவரன் இருக்கும் நாற்காலிக்கு முன்னிருந்த மேசையில்வைத்துவிட்டு, தங்கள் தமயனிருப்பதற்காகவொரு நாற்காலியையும் எடுத்துக்கொண்டுவந்து மேசையின் பக்கலிலே இட்டுவிட்டு விநயமாகத் தாயின் பின் ஒதுங்கி நின்றாள். குமாரசுவாமி வந்தவுடன் நாற்காலியிலிருந்துகொண்டு ஒரு பாத்திரத்தை யெடுத்துச் சுந்தரேசுவரன் கையில் அருந்தக் கொடுத்துவிட்டுத் தானும் மற்றப் பாத்திரத்திலுள்ளதை அருந்திவிட்டுப் போய் ரதத்திலேறிச் சென்றார்கள்.

வரும்.

'பொலீஸாரின் கொடுமைகள்'

விசாரிப்பதற்குக் கொம்மிஷன் நியமிக்க வேண்டுகோள்

நாரந்தனை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையில் நடைபெற்ற ஒரு பொதுஜனக் கூட்டத்தில் பிறக்ரர். கிளவ். பாலசிங்கம் J. P. அவர்கள் பேசியதாவது:-

"உள்நாட்டுப் பொலீஸார் செய்து வரும் கொடுமைகளை மத்திய அரசாங்கத்தாருக்கு எடுத்துக்காட்டி விண்ணப்பித்து எங்கள் ஆடவர், பெண்கள், குழந்தைகள் ஆகியோரைக் காக்கவேண்டிய காலம் வந்து விட்டது. இத் தீவிலுள்ள பல்வேறு பொலிஸ் நிலையங்களை நாஜியர் முறைப்படி தயாரிக்கப் பட்ட தாக்குதல் நிலையங்களென்று நான் கூறுகின்றேன். நான் கூறுவதை வற்புறுத்த நான் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்."

சட்டமும் ஒழுங்கும் நிலவுதற்கு இருப்பவர்களாகச் சொல்லிக்கொள்ளப்படும் அவர்களின் சட்டத்தை மீறிய பல செயல்களைப்பற்றியெல்லாம் உள்நாட்டு விஷயத் தந்திரி மந்திரி அண்மையில யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது அவரிடமும், மாகாணத்தலைவரிடமும் அரசாங்கசபையில் எமது பிரதிநிதியாக இருப்பவர்களுக்கும எடுத்துக் கூறியிருக்கிறேன். பொறுப்புள்ள உத்தியோகத்தர்கள் விவாகஞ் செய்தவர்களாகவிருக்கவேண்டுமென்றும் அவர்கள் விவாகமாகாத பிரமச்சாரிகளாக இருக்கக்கூடாதென்றும் அவர்களுக்கு நான் எடுத்துக் காட்டினேன். சிறிய தலைமைக்காரர் உத்தியோகத்திற்குத் தெரியப்படுபவர்கள்பற்றியும் இது அவதானிக்கப்படவேண்டுமென்று நான் குறிப்பிட்டேன். நான் கூறிய பலவற்றுள் இதுவும் ஒன்று.'

வேலணை நடராஜ வித்தியாசாலை மனேஜரும் சொத்துக்காரருமான திரு. S கனகசபாபதிப்பிள்ளை பேசியதாவது:—

"இத்தீவிலுள்ள மக்கள் பழங் காலந்தொட்டே சமாதானத்தை விரும்புபவரும் ராஜவிசுவாசமுள்ளவருமாவர். ஆனால், சிலகாலமாக ஏறக்குறைய ஒவ்வொருநாளும பொலீஸார் செய்துவரும் அடாத முறைகளால் அவர்கள் ராஜவிசுவாசம் கடுமையாகச் சோதிக்கப்படலாயிற்று. காரணமில்லாமலே சட்டஒழுங்குக்கு அடங்கி நடக்கும் மக்களெல்லாம சாதாரண குற்றவாளிகள் போல அவமதிக்கப்பட்டனர்."

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. R. மருதையனார் பேசும்போது, அண்மையில் சிலமாசங்களாக வஞ்சகமுமறியாத ஏழைக்கிராமவாசிகளைத் தாக்குவதையே பொலிசார் தமது விளையாட்டாகக் கொண்டுள்ளாரென்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் "யாழ்ப்பாண டிஸ்திரிக்டில் உள்ள பொலிசாரின் நடத்தையைப்பற்றி விசாரித்து அறிக்கை செய்வதற்குச் சுயாதீனமுள்ள ஒரு கொம்மிஷனை நியமிக்கவேண்டுமென்று தேசாதிபதியை வேண்டிக்கொள்கின்றோம்" என்பதும் ஒன்றாகும்.

ஜப்பானியர் ஆட்சியின் கீழ் ஜாவா வாழ்க்கை

ஐரோப்பியர் பாதுகாப்பில் வைக்கப் பட்டிருக்கின்றனர்

டச்சு நாஜியருக்கும் அதே கதி

லண்டன், செப் 27

ஜப்பானியர் ஜாவாவை ஆக்கிரமித்துக்கொண்ட பிறகு முதல் மூன்று மாதங்களுக்கு ஜாவாவின் வாழ்க்கை எவ்வாறு இருந்ததென்பது ஜாவாவிலிருந்து தப்பியோடி வந்திருக்கும் டச்சுக்காரர்கள் சிலர் கூறும் விவரங்களிலிருந்து தெரிய வருகிறது. நாட்டிலுள்ள எல்லா ஐரோப்பியர்களும் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றனர். டச்சு உத்தியோகஸ்தர்களும் சிறையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். திருட்டுக் குற்றங்களுக்குக் கைகள் வெட்டப்படுகின்றன. பகிரங்கமாக மரணதண்டனைகள் தலையை வெட்டுவதின்மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

ஜப்பானியர் தீவை ஆக்கிரமித்துக்கொண்டபொழுது ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் சிறந்தபடியாகி விட்டது. இன்னும் உற்பத்தியைப் பெருக்குவதில் ஜப்பானியர் வெற்றியடைய முடியவில்லை. யுத்தத்திற்குத் தேவையான றப்பர் பழைய இரும்பு முதலியவைகளே ஜாவாவிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதியாகிறது. பல தோட்டங்கள் வேலையை நிறுத்தி விட்டன.

ஜப்பானிய இராணுவ நிர்வாகமே நடைபெறுகிறது. கொள்ளை அவ்வளவாக நடக்கவில்லை.

ஜப்பானிய காவற்காரர்களைக் கண்டால் பொதுஜனங்கள் தலைவணங்க வேண்டுமென்று ஒரு விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்யத் தவறினால் நல்ல பூசை கிடைக்கிறது. ஜப்பானியர் வந்தவுடன் டச்சு நாஜிகள் விடுதலை செய்யப்பட்டாலும், பின்பு அவர்களும் கைது செய்யப்பட்டுவிட்டனர். அவர்களுக்கு ஜப்பானியர் சலுகை ஒன்றும் காட்டவில்லை.

ஆர்தர் மூருக்கு வாழ்த்து

பொய்ப் பிரசாரத்திற்குச் சரியான பதில்

ராஜாஜி அறிக்கை

சென்னை, செப் 22

மிஸ்டர். ஆர்தர்மூர் வெளியிட்டுள்ள அறிக்கையைப்பற்றி ஸ்ரீயான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் பின்வருமாறு கூறுகிறார்.

தற்போதைய நிலைமையிலுள்ள முக்கியமான அம்சங்களை மிஸ்டர். மூர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவரது அறிக்கைக்கு இணையாக வேறு எதையும் சொல்லமுடியாது. அவர் உண்மையான அபிமானத்துடனும் தைரியத்துடனும் எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் உள்ள பொதுஜனங்கள் தப்பபிப்பிராயம் கொள்ளும்படி தவறான பிரசாரம் செய்யப்படுவதை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். பொதுஜன அரசாங்கமில்லாமல் யுத்தம்முடியும்வரை எதேச்சாதிகாரத்துடன் இங்கு நிருவாகத்தை நடத்திப்போகவே வைஸ்ராயும் பிரிட்டிஷ் அரசாங்கமும் துணிந்திருப்பதாக இந்தியா அனைவரும் கருதுகின்றார்கள். என்ன நடந்தாலும் சரி, அவர்கள் இவ்விதத் துணிவு கொண்டிருப்பதாகவே எல்லோரும் எண்ணுகிறார்கள். சமீபத்தில் நடந்த காரியங்களும் இதை ஊர்ஜிதப் படுத்துகின்றன.

பொய்ப் பிரசாரம்

காங்கிரசும் லீகும் ஒன்றுபட்டு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டால் உண்மையான அதிகாரத்தை இந்தியரிடம் ஒப்படைப்பதாக இந்தியாவுக்கு வெளியில் செய்யப்படும் பிரசாரம் பொய்யானதென்பதை அவர் தெளிவுபடுத்திவிட்டார். இது இந்தியாவுக்கு அவர் செய்த ஒரு கால ஊழியமாகும். பிரிட்டிஷார் மட்டும் அவ்வித நிபந்தனையை வெளியிட்டிருந்தால் நிலைமையே மாறி ஒப்பந்தம் ஏற்படுவதற்கான முயற்சி வலுத்திருக்கும். 15 நாட்களில் ஒப்பந்தம் ஏற்பட்டு தேசிய அரசாங்கமும் அமைந்திருக்கும் துவேஷப் புத்தியின்றி மிஸ்டர். ஆர்தர்மூரைப் போன்றவர்கள் விஷயங்களை நோக்குகிறார்கள். இவர்கள் ஐந்தாம்படையினர் என அழைக்கப்படுவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. அவர்களை உத்தியோகத்திலிருந்து விலக்கிவிடுவதாயும் பயமுறுத்துகிறார்கள். ஐரோப்பியர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் அவர்களை அங்கம் வகிக்கவும் விடுகிறதில்லை. இந்தியாவிலுள்ள ஆங்கிலேய ஸ்திரீபுருஷர்கள் பலர் இந்தியாவின் கஷ்டத்தை உணர்ந்து வெளியிடும் அபிப்பிராயங்களையும் பிரிட்டிஷ் பொதுமக்கள் அறியவொட்டாமல் செய்யவும் யுத்தத்தின் பெயரைச் சொல்லி நடத்தும் தணிக்கை முறையை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள்.

'வாசகனின்' அவகோலம்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

வென்ன? எத்தனை கிறிஸ்தவர்கள் அங்கு யேசுவுக்கு உண்மையாயிருக்கின்றனர்? குண்டு விழும்போது கோயிலை விட்டோடுவது குற்றந்தான். அது கோயிற் கிரியைகளைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த பணியாளன் செய்த குற்றம். அவன் சமயகுரவனல்லன்; அதிகாரம் பெற்றவனல்லன். ஆனால், தம் நாட்டவர்கள், தம் மதத்தவர்கள், தம் மத ஸ்தாபகர் யேசு வேண்டிக்கொண்டபடி ஒழுகவேண்டியவர்கள், தம்மை அதிகாரம் பெற்ற தலைவராகக் கொண்டவர்கள், இத்தகைய பாவங்களில் தலைசிறந்த பாவமாகிய கொலைத் தொழிலிலீடுபட்டு ஒன்றுமறியாத குழந்தைகளையும், அபலைகளான பெண்களையும், நிராதரவான ஏழைகளையும் குண்டுகளையாக்குவதைப் பார்த்துக் கொண்டு, தாமுண்டு தம்போகங்களுண்டு என்று, ஒரு ஊரே வசிக்கக்கூடிய அத்தனை பிரமாண்டமான மாளிகையில் தம்மையும் தம் சுபாலங்களையும் நிரப்பிக்கொண்டு, வாளாவிருக்கும் மதத் தலைவரின் 'புகழ்ச்சிக்குரிய அருந்தியாகம்' யேசுவின் கண்களிற் சாதாரண குற்றத்தினபாற் பட்டதல்ல. குற்றத்தின் சிகரமே யென்னலாம்! ஆம், இங்ஙனம் கொலைக் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் மஹானுபாவர்கள் என்ற முரடன் முசோலினியின் இத்தாலியைத்தான் குறிப்பிடுகிறோம். மேற்குறித்த மதத் தலைவர் யாரென்பதை நாம் சொல்லாமலே யாரும் அறிந்திருக்கலாம்.

முடிக்குமுன் வாசகனின் எழுத்து நடையைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லவேண்டும்.

திரு வாசகன் தாம் கையாளும் உபமானங்கள் பொருத்தமுடையனவா இல்லையா என்பதை நினைக்கின்றிலர் போலும். தமக்குத் தெரிந்த உபமானங்கள் எல்லாவற்றையும் எப்படியாவது தாமெழுதுவதில் 'சனுத்திவிட' வேண்டுமென முயற்சிக்கிறார். இவர் உபமானங்கள் பாமரர்க் கேற்றவையே யன்றிப் படித்தவர்கள் ரசிப்பதற்கில்லை. அசம்பாவித உதாரணங்களை அமோகமாக வகையாளுவதோடு நகைப்பமாக உபமானங்களைப் புகுத்துவதிலும் வாசகன் இணையற்ற திறமையுடையார் என்பதைத் தமிழ் மக்கள் கண்டிருப்பார்கள். 'கழுதை கசினது' போன்ற உபமானத்தின் பொருத்தத்தை அறிந்தால் வாசகனை அறியவேண்டும், காட்டுவது, காட்டாமல் காட்டுவது, மாட்டுவது, மாட்டாமல் மாட்டுவது போன்ற சொற்கள் இவர்கையிற் சிக்கி அவஸ்தைப் படுகின்றன.

இவை போக, வாசகன் மிகவும் கேவலமான குறிப்புகளை உபயோகிக்கிறார். "குரங்குச் சேட்டை" போன்ற பிரயோகம் மிகமிகக் கீழ்த்தரமானது; கண்ணியமற்றது. காழ்ப்பு பதிலுக்குப் பதில் எளிதிற் சொல்லிவிடலாம்; அவர் நினைப்படியான தூஷணைகளைக் கொட்டிவிடலாம். ஆனால் அது பண்பட்டவர்கள் செய்கையாகாது; வாத முறையாகாது; சமய தர்மமுமாகாது; இந்துசாதனத்தில் இடம் பெறவும் மாட்டாது.

எது எப்படியாயிருந்தாலும் இரண்டு விஷயங்களில் நாம் வாசகனுக்கு நன்றி கூறித்தானாகவேண்டும். 'சிவபாலகனின் கவகோலம்' என்பதாகத் தலைப்பிட்டு எம் உண்மை

தொடர்ச்சி 4 ம் பக்கம்

திருச்சி ரேடியோ நிகழ்ச்சிகள்

† இசைத்தட்டு

வியாழன் அக்டோபர் 1

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 எம். ஆர். வாசவாம்பாள் பாட்டு 9 முடிவு.

1 இசைக்கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என். கேசி புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-5 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 என். கேசி புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 எம். ஆர். வாசவாம்பாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திவிளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 தஞ்சாவூர் பி. நாராயணசாமிபிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஸி. வேணுகோபால் கிளாரிநெட் 10 ஐரோப்பிய சங்கீதம்† 10-30 முடிவு.

வெள்ளி அக்டோபர் 2

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 ஏ. மஹமத் தாவுத்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஆர். ராமமூர்த்தி பாட்டு 9 முடிவு.

1 சினிமா கீதம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆர். ராமமூர்த்தி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-5 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 தஞ்சாவூர் கே. பாலகிருஷ்ணபிள்ளைபாட்டு 5-45 குரான்-இ-ஷரீப் 6 டி. எஸ். எஸ். மீனாக்ஷிசுந்தரம்சகோதரர்கள் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஊர்வசி சாபம் இசை நிகழ்ச்சி 8 டி. எஸ். எஸ். மீனாக்ஷிசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 8-45 தஞ்சாவூர் கே. பாலகிருஷ்ண பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் பி. பி. ஸி. பேச்சு 10 படப்பாட்டுகள்† 10-30 முடிவு.

சனி அக்டோபர் 3

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 துதிப் பாடல்கள்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 கும்பகோணம் சிவ வடிவேலு பிள்ளை வயலின் 9 முடிவு.

1 எஸ். பாலகிருஷ்ணன் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐரோப்பியசங்கீதம்† 2 தமிழில் செய்திகள் 2-5 கும்பகோணம் சிவ வடிவேலு பிள்ளை வயலின் 2-30 முடிவு.

மாலை: 5 மதராஸில் உள்ளபடி 5-40 திருவாய்மொழிவிளக்கம் பஜனை 6 டாக்கி கீதங்கள்† 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செயல் முறை சிக்கனம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி 9 கனபஞ்சகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 எச். எஸ். மத்வாசார் கோட்டுவாத்யம் 10 கதம்பம்† 10-30 முடிவு.

ஞாயிறு அக்டோபர் 4

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 டாக்கி இசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டி. கே. பாலகிருஷ்ணஐயங்கார்பாட்டு 9 முடிவு.

12 சினிமாகீதம்† 12-30 ஒலி மலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி. கே. பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-5 வீணை† 2-30 முடிவு.

மாலை: 5 என். அனந்தலக்ஷ்மி பாட்டு 5-40 தேவாராதனை (ஆங்கிலிகன்) 6 என். அனந்தலக்ஷ்மி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 புத்தகவிமர்சனம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கண்ணாடியில் கண்டது நாடகம் 8 மைசூர் டி. தருராஜப்பா வயலின் திருக்கோகர்ணம் மீனாக்ஷி சுந்தரம் மிருதங்கம் ஆலங்குடி ராமசந்திரன் கடம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 டி. பி. ராமகிருஷ்ணன் பாட்டு 10 கதம்பம்† 10-30 முடிவு.

திங்கள் அக்டோபர் 5

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஏ. கே. ராசுநாயுடு நாகஸ்வரம் 9 முடிவு.

1 சினிமா கீதம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மன்னார்குடி கே. சூரியபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-5 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 ஏ. கே. ராசுநாயுடு நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 மன்னார்குடி கே. சூரியபாய் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச்சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 காரைக்குடி சாம்பசிவஐயர் வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வயோலா, ஜலதரங்கம் 10 படப்பாட்டுகள் 10-30 முடிவு.

12 மாதங்களில் 500 கப்பல்கள்

அமரிக்கர் கட்டி முடித்திருக்கின்றனர்

லண்டன், செப் 27

பிரிட்டனிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் மிஸ்டர். ஜோன். ஜி. வினன்ட் மிஸ்டர். சர்ச்சில் அமெரிக்கர்களுக்கு விடுத்திருக்கும் செய்தியொன்றை இன்று ஒலிபரப்பினார். அச்செய்தி கூறுவதாவது:-

அச்சு நாட்டு ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்க ஐக்கிய தேசங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் காரியங்கள் பல தைரியத்தையும் ஊக்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றன. அமெரிக்கக் கப்பல் கட்டும் திட்டமே இதற்கு ஓர் உதாரணமாகவிருக்கிறது. 12 மாசத்திற்குள் சமுத்திரத்தில் செல்லக்கூடிய 500 கப்பல்கள் கட்டியதென்பது ஆச்சரியகரமான விஷயமாகும். இத்துடன் எதனையும் ஒப்பிட முடியாது. நாம் எதிர்பார்த்ததைவிட இத்தொகை எவ்வளவோ அதிகமானது. இன்று முடியும் இவ்வருடத்தில் உங்களுடைய தொழிலாளர்கள் 4 300 000 தொன் மொத்த நிறையுள்ள கப்பல்கள் கட்டிமுடித்திருக்கின்றனர்.

ஐக்கிய தேசங்களுக்கு இக்கப்பல்கள் எவ்வளவு உதவியாயிருக்குமென்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். நாஜிகளும் அறிவார்கள். நாஜி ஆதிக்கத்திலிருந்து விடுபடத் தவிக்கும் அடிமை மக்களுக்கு இது எவ்வளவு உதவியாக விருக்குமென்பது உங்களுக்கு நன்கு தெரியும். இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அனைவரும் கட்டாயம் சரித்திரத்தில் இடம் பெறுவார்கள்.

கப்பல் நிலைமை இன்னும் கவலைக்கிடமாயிருக்கிறது

யுத்தத்தில் வெற்றிபெற வழி

பிரதமமந்திரி செய்தி

கப்பல் நிலைமை இன்னும் கவலைக்கிடமாயிருந்த போதிலும் சமீபத்தில் அபிவிருத்தி யடைந்திருக்கிறது என மிஸ்டர். சர்ச்சில் லண்டனில் அந்தரங்கமாக நடந்த ஒரு மகாநாட்டுக்கு அனுப்பிய செய்தியில் கூறியிருக்கிறார், அதில் கப்பல் நிர்மாணத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளிகள் பிரதிநிதிகள் சுமார் 1000 பேர் கலந்துகொண்டார்கள். மிஸ்டர். சர்ச்சில் தமது செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது:-

கப்பல்கள் இன்றி நாம் ஜீவிக்க முடியாது அவைகளில்லாமல் நாம் வெற்றி பெறுவதற்கில்லை. கப்பல் நிலைமை அபிவிருத்தியடைந்திருக்கிறதாயினும் இன்னும் கவலைக்கிடமாகவே யிருந்து வருகிறது. நாம் கட்டக்கூடிய ஒவ்வொரு கப்பலும் நமக்குமிக அவசரமாகவேண்டியிருக்கிறது. நீங்கள் உங்களால் சாத்தியமானவரை தீவிரமாக இத்துறையில் உழைக்கவேண்டும். அங்ஙனம் செய்வதன் மூலமே நீங்கள் நமக்கு வெற்றிகிடைக்கச் செய்யலாம்.

கப்பல் உற்பத்தி வேலையை இன்னும் துரிதமாக நடத்த வழி காணவேண்டுமென ஒரு முகமாக ஒரு தீர்மானம் நிறைவேறியது. இம் மகாநாட்டில் தொழில் இலாகா மந்திரி மிஸ்டர். எர்னஸ்ட் பெவின் கடற்படை மந்திரியான மிஸ்டர். ஏ. வி. அலக்ஸாண்டர் முதலியவர்கள் பேசினர். கடற்படைமந்திரி ஒளிவு மறைவின்றி உள்ள நிலைமையை எடுத்துக்காட்டினர்.

கப்பல் நிலைமைபற்றிய பல ரகசியத் தகவல்கள் வெளியிடப்பட்டன. கடற்படையைச் சேர்ந்த பல உயர்தர அதிகாரிகளும் வந்திருந்தனர்.

ஒரு விஸ்கிப் போத்தலுக்கு ரூ. 2500

'கேக்'கும் முத்தங்களும் ஏலத்தில் விற்பனை

தல்துவை பந்தலில் கழனிவெலி கிளப்பினர் சென்ற சனிக்கிழமை யிரவு நடத்திய மேல்நாட்டு நடனத்தில் அநேகர் பங்குபற்றியதுமன்றி யுத்த நிதிக்கு அதிக சகாயமுமேற்பட்டது.

மாலையில் மிஸ்டர். டபிள்யு. பைக் ஏல விற்பனையாளராக ஒரு போத்தல் விஸ்கியை ஏலத்தில் விட்டபொழுது ஆயிரம் ரூபாவிலிருந்து கடைசியாக அப்போத்தல் மிஸ்டர். டபிள்யூ. ஆர். ஜே. மான் அவர்களால் 2500 ரூபாய்க்கு வாங்கப்பட்டது. அவ்விடம் குழுமியிருந்தவர் அநேகரை இது பிரமிக்கச் செய்தது.

அடுத்தபடியாக ஒரு பெரிய கேக் ஏலம் போடப்பட்ட பொழுது ஒரு கடற்படை உத்தியோகஸ்தர் 1000 ரூபாவுக்கு வாங்கினர்.

பின்னர் அழகுமாதர்களின் முத்தங்கள் ஏலத்திற்கு விடப்பட்டபொழுது ஒவ்வொரு முத்தத்திற்கும் ரூபாய் 50கிடைத்தது.

சாத்திரப் பிரகாரம் நடைபெற்ற இந்த ஏலவிற்பனையால் யுத்தநிதிகளுக்கு மொத்தம் ரூபா 3,800 சேர்ந்தது.

இருகடற்படை உத்தியோகஸ்தர்களே முத்தங்களை விலைக்கு வாங்கினர். இவர்கள் ஒருவர் அடர்ந்த கருப்பு நிறமான தாடியுடையவராவர்.

பலபல வேடமாடும் பரன்

திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

சிவபெருமான் கருணைக்கடல், அடியவர்க்கு எளியவர், பரகதி காவலர். அடியவர் எங்குள்ளரென்று தேடித்திரிந்து அவர்களுக்கு அருள்பாலிப்பவர். அவரவர் பக்குவத்திற் கேற்ப வடிவங்கொண்டு அவரவரை ஆட்கொள்பவர். சம்பந்தருக்குத் திருமுலைப்பால் ஊட்டுவித்தும், அப்பருக்குச் சூலைநோய் உண்டுபண்ணியும், சுந்தரருக்குக் கிழப்பிராமணவேடம் பூண்டுவந்து திருமணத்தைத் தவிர்த்தும், மாணிக்கவாசகருக்குக் குருந்தமர நிழலில் தக்ஷிணாமூர்த்தி கோலத்தோடு உபதேசித்தும் அருள் புரிந்தவர். "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா"வென்ற தேவாரத்திற்கிணங்கச் சிவபெருமான் ஒவ்வொரு அடியாரிடத்திற் செலுத்தும் கருணை ஒவ்வொரு விதமாகவேயிருக்கும். இது அவர் திருவிளையாடலென்று சொல்லற்பாலது. இதை ஓர் உவமானமாக முகத்தால் விளக்கலாம். ஒருதாய்க்கு மூன்று புதல்வர்கள் உளர். ஒருபிள்ளையினிடத்துப் பிரியம் அதிகம். என் சமமாகப் பிரியம் வைக்கவில்லை, ஒரு குமாரனை மாத்திரம் ஏன் அதிப்பிரியமாக நடத்தவேண்டும் என்று கேட்க இயலாது. இது உலகானுபவம். இஃதேபோல் இறைவன் கருணைப்பெருக்கமும். ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாத சிவபிரான் ஆருருவவுன்னுவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுருத்தோன்றும் என்னும் தேவாரத்திற்கிணங்க ஒவ்வொரு நாயனாரிடத்தும் ஒவ்வோருருவாய்ச் சென்று அவரவர் அடிமைத் திறத்தை உலகறியச் செய்துள்ளார், திருநீலகண்டரிடத்திற் சிவயோகி வடிவங்கொண்டும், இயற்பகை நாயனாரிடத்தில் தூர்த்த வேடங்கொண்டும், இளையான்குடிமாற நாயனாரிடத்திற் சைவவேடங்கொண்டும் அமர்நீதி நாயனாரிடத்திற் பிரமசாரி வேடங்கொண்டும் மானக்கஞ்சாற நாயனாரிடத்திற் மகாவிரதி வடிவங்கொண்டும் திருக்குறிப்புத் தொண்டரிடத்திற் சிவபத்தர் வேடங்கொண்டும், சிறுத்தொண்ட நாயனாரிடத்தில் வைரவ வேடங்கொண்டும் அருள்புரிந்தமை பெரியபுராண வாயிலாக அறியலாம். வேறுவேறுருவும் வேறுவேறியற்கையும், நூறு நூறாயிரம் இயல்பினதாக என்பது திருவாசகம். நாரை, கரிக்குருவி, பன்றிக்குட்டி, சிலந்தி, யானை முதலிய பிராணிகளுக்கும் அருள்புரிந்தமை திருவிளையாடற்புராணம் முதலிய தலபுராணங்கள் மூலமாய் அறிந்த விஷயம். எங்கேனும் யாதாகிப்பிறந்திடினும் இங்கே யென்றருள்புரியும் எம்பெருமான் என்பது தேவாரம். என்றும் அடியார்க்கு எளிவந்தவராய சிவபெருமானையாம் உள்ளபடி வணங்கினால், "எண்ணிய எண்ணியாங்கே யாவும்பெற முடித்தாய் போற்றி" என்றபடி யாம் எண்ணியதைப் பெற்றுய்யலாம். அவனை எப்போதும் வணங்குவோமாக.

ஈசனடிக் கன்பிலார்போ லெளி
யாரில்லை யாவர்க்கும்
ஈசனடிக் கன்புடையார் போல்
வலியாரில்லை யாவர்க்கும்
ஈசனடிக்கன் பின்மையினுலெளி
தாய்த்திரிந்த விக்கபவாய்
ஈசனடிக் கன்புடைமையினுல
வலிதாயிற்றே எவ்வுயிர்க்கும்

ஆஸ்பத்திரிக்குச் சுறுமீன் எண்ணெய்

விசேஷ உபகாரணம் வாங்கப்பட இருக்கிறது

யுத்த காலத்தில் இலங்கைக்கு வேண்டிய மீன் எண்ணெய் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறபடியால் வைத்திய சுகாதாரப்பகுதி மீன்பிடித் தொழிற் பகுதியின் உதவியைக்கொண்டு இங்கேயே ஒருவித சுறுமீன் எண்ணெயை உற்பத்தி செய்ய முயன்று வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் சுறுமீன் எண்ணெயிலுள்ள 'ஏ' வைட்டமினைக் கண்டு பிடிப்பதற்கான விசேஷ உபகரணமொன்று வாங்கச் சுகாதார வைத்திய நிர்வாக சபை தீர்மானித்திருக்கிறதென்று தெரிகிறது.

இப்பொழுது பல கிராமங்களில் மீன்பிடிக்கும் படகுகளை பூசுவதற்காகச் சுறுமீன் எண்ணெய் தயாரிக்கப்பட்டு வருகிறதென்று அறியக்கப்படுகிறது. இவ்வெண்ணெயிலும் போதிய சத்து இருக்கிறதென்று இரசாயன ஆராய்ச்சியின் தெரியப்படுத்தியிருக்கின்றனவென்றும், இதன் உற்பத்தியைப் பெருக்கினுல் இதற்கு நல்ல விற்பனையிருக்குமென்றும் மீன்பிடி தொழில் இலாகா கருதுகிறது.

கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் இவ்வெண்ணெயை மீன்பிடி தொழில் இலாகா சேகரித்து வைத்தியச் சுகாதார இலாகாவிற்கு விற்க வேண்டுமென்று தெரிகிறது. சுகாதார வைத்திய இலாகா நன்கு பரிசோதித்து அதை வாங்கி ஆஸ்பத்திரிகளுக்கு உதவுமென்று தெரிகிறது.

கண்டிப்பான விலைக் கட்டுப்பாடு

65 அதிகாரிகளை நியமிக்க ஏற்பாடு

65 விலைக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்களை நியமிக்கும் பொருட்டு விவசாய நிர்வாகசபை மான்யம் அனுமதித் திருக்கிறது.

பொதுஜனப்பாதுகாப்பு அதிகாரியின்கீழ் உத்தியோகம் பார்க்கும் குறித்த இன்ஸ்பெக்டர்கள் விலைக் கட்டுப்பாட்டைச் சரிவரச் செயலிற் கையாளும் பொருட்டு இலங்கையின் சில பாகங்களுக்கும் நியமிக்கப்படுவர்.

கண்டிப்பான விலைக் கட்டுப்பாட்டைச் செயலிற் கையாளப் பொதுஜனப் பாதுகாப்புக் கொம்மிஷனர் திட்டஞ் செய்து வருவதாகத் தெரிகிறது. இப்போதைய ஸ்தாபனத்தைப் பலப்படுத்துவதற்குப் புதிய சிப்பந்திகள் தேவையாகும்.

புகைரதங்களில் விளக்கு வசதி

நெருக்கடி காரணமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது

புகைரதங்களின் மின்சார விளக்குகளுக்குத் தேவைப்படும் சாமான்கள் இப்பொழுது கிடைப்பரிதாகையால், இரவில் பிரயாணஞ் செய்பவர்கள் விளக்கேற்றப்படாத அல்லது அதிக பிரகாசமில்லாத விளக்குகளேற்றப் பட்ட புகைவண்டிகளிற் பிரயாணஞ் செய்ய நேரிட்டிருக்கிறது. குறிப்பாகச் சொற்ப தூரம் வரை செல்லுபவர்களுக்கு இக்கஷ்டம் அதிகமுண்டு.

டைனமோ, மின்சாரக் கம்பி முதலிய சாமான்களும், மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் சாமான்களும் இவற்றைப் பழுதுபார்ப்பதற்கு அவசியமான சாமான்களும் இப்பொழுது போதிய அளவு கையிருப்பிலில்லை. கிடைக்கக் கூடிய சாமான்களும் நெடுந்தூரம் பிரயாணஞ் செய்யும் இராப்புகைரதங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல், முதலாவது வகுப்பிலுள்ள மின்சார விசிறிகளும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பழைய வழக்கத்தைப் போல், எண்ணெய் விளக்குகளை உபயோகிப்பது முடியாத காரியம். இப்பொழுது எண்ணெய் விளக்குகள் கையிருப்பில் இல்லை. மேலும், இப்படிப்பட்ட விளக்குகளை வண்டிகளின் மேற்புறத்தில் அமைப்பதற்கான வசதிகளும் இல்லை.

ஆடு மாடுகளை அனுப்புவதற்கு குதிரை ஏற்றும் வண்டிகள்

இப்பொழுது அநேகமாக இரா வண்டிகள் எல்லாவற்றிலும் விளக்குகள் எரிக்கப்படுவதுண்டு. ஆனுல், இவை தகர மறைப்புகளால் மூடப்பட்டிருப்பதுண்டு.

புகைரத மூலம் குதிரைகளை அனுப்புவதும் குறைந்துவிட்டதால் குதிரைகளை ஏற்றியனுப்பும் வண்டிகளும் ஏனைய தேவைக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. இவற்றில் ஆடுமாடுகளும், மற்றுஞ் சாமான்களும் ஏற்றியனுப்பப்படுகின்றன. சிலவண்டிகள் சாமான வண்டிகளாக மாற்றியமைக்கப்படும். சமீபத்தில் புகைரதத்தில் நெருக்கடி ஏற்பட்டபொழுது இவ்வண்டிகள் சாமான் ஏற்றியனுப்புவதற்கும் உபயோகிக்கப்பட்டன.

திருட்டுத்தனமாக ஏற்றிவந்த 61 மூடை அரிசி

நடுக்கடலிற் கைப்பற்றப் பட்டது

பருத்தித்துறைக்கப்பால் நடுக்கடலிற் கள்ளத்தனமாக ஏற்றிக்கொண்டு வரப்பட்ட 61 மூடை அரிசியைத் துறைமுகப்பகுதி அதிகாரிகள் கைப்பற்றினர். குறித்த அரிசி ஒரு பெரிய மீன்பிடிப் படகில் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த அரிசி தென் இந்தியத் துறைமுகமொன்றில் வல்வெட்டித் துறைக்கு ஏற்றிக்கொண்டு வரப்பட்டதாகவுந் தெரிகிறது.

பருத்தித்துறையைச் சேர்ந்த துறைமுகப்பகுதித் தலை அதிகாரி தமது மோட்டார்ப்படகில் சுற்றுக்காவலுக்குச் செல்லும்போது மீன்பிடிப்படகில் ஆதனமான சாமான்கள் இருந்ததைக்கண்டு பிடித்தார். இதுபற்றிப் படகின் தண்டேல் விசாரிக்கப்படும்போது எவரோ ஒருவர் தென்னிந்தியாவைச் சேர்ந்த முத்துப்பேட்டைத் துறைமுகத்தில் குறித்த சாமானைத் தம்மிடம் கொடுத்து வல்வெட்டித்துறையிற் சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டதாகக் கூறினர். மேலும் மீன்பிடிப்படகு தமக்கே சொந்தமானதென்றும் அது மீன்பிடித்தொழிலுக்குமட்டும் உபயோகிக்கப்படுவதென்றும் அவர் கூறினர்.

சுங்க அதிகாரிகள் புலன் விசாரித்து வருகின்றனர். தண்டேலும் படகைச் சேர்ந்த மற்றும் ஆட்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணப் பாய்மரக் கப்பலொன்றில் 17 மூடை அரிசியைக் கள்ளத்தனமாக ஏற்றியனுப்ப முயற்சிக்கப்பட்டதையொட்டிய விசாரணை இப்பொழுதும் நடைபெற்றுவருகிறது. கள்ளத்தனமாக அரிசியை ஏற்றிவைத்திருந்ததைக் கொழும்பைச் சேர்ந்த கடைஅதிகாரிகள் கண்டுபிடித்தனர். பாய்மரக்கப்பலில் அரிசியை ஏற்றி வைத்தவர்கள் தலைமறைவிலிருந்து வருவதாகத் தெரிகிறது. கப்பலின் தண்டேல் கைதுசெய்யப்பட்டிருக்கிறர்.

சிசுவைக் கொன்றதாக வழக்கு

எதிரி விடுதலை பெற்றுர்

இரத்தினபுரியிலிருக்கும் மிலாவெட்டிய தோட்டத் தொழிலாளியான பெருமாள் தமது பழனிமுத்து என்னும் சிசுவைக் களுகங்கையில் எறிந்து கொன்றுவிட்டதாகத் தொடரப்பட்ட வழக்குச் சனிக்கிழமையன்று கொழும்பு அசைஸ்கோட்டில் நீதிபதி மிஸ்டர். டி. கிரெட்ஸர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது எதிரி குற்றவாளியல்லவென்று ஜூரர்கள் ஏகமனதாய்க் கூறியதன்பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

வழக்காளிபக்கத்திற் கூறப்பட்டதாவது:-

எதிரியின் மனைவி ஜனவரி மீ 25-ந் திகதி காலமானுள். தனது இரு பிள்ளைகளையும் மாமனுரிடம் அழைத்துச்சென்று அவற்றைப் பராமரிக்கும்படி கேட்டபொழுது அவர் மூத்தபிள்ளையை வைத்துப் பார்ப்பதாகவும் ஆறுவாரச் சிசுவைப் பார்க்க இயலாதெனவும் மறுத்து விட்டார். பெப்ரவரி மீ 6உ வீடுதிரும்பி வரும்போது களுகங்கையிற் சிசுவை ஆற்றில் வீசிவிட்டார்.

எதிரி கூறியதாவது:- இது விஷயம்பற்றி மிக்க கவலையுடையவனுயிருந்தேன். வீடு திரும்பி வரும்போது மது அருந்தியிருந்தேன், குறிக்கப்பட்ட இடத்தில் கால் இடறி விழுந்ததும் சிசு ஆற்றுக்குள் உருண்டு விழுந்திருக்கக்கூடும். பின்னர் ஆற்றிற்கூடச் சிசுவைத் தேடிப்பார்த்தேன். பழனிமுத்துவின் பிரேதம் கண்டுபிடிக்கப்படவில்லை.

சிவஞானபோத நூல்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

ளும் 'அண்டர்தமக்காகமநூல் மொழியுமாதியை' என்பது முதலிய பாடல்களாற் றெரிவிக்கின்றன. உமாபதி சிவாசாரிய சுவாமிகளும் பௌஷ்கர விருத்தியில் சிவாகம வரலாறு சுருக்கி எழுதியதை இங்கே காட்டுவோம்.

"உலகின் கண்ணே மும்மலக்களான் மறைப்புண்ட அறிவுத் தொழிலுடையராய்க் கடப்பதற்கரிய பிறவிப் பெருங் கடலினுழ்ந்து அலைக் கடைதுயருமாறறியாத அனந்தவுயிர்களையும் உய்யக் கொள்ளும் பொருட்டுப் பேரருள் நிறைந்த முதல்வராகிய சிவபெருமான் காமிகமுதல் வாதுளமீறாகிய அருளுலக்களை காத முதலிய வடிவினவாக அருளிச் செய்தார். பின்னர் அம்முதல்வனார் சதாசிவ வடிவினாகியும் நின்று, அவ்வாகமங்களையே எண்ணிறந்த செய்யுள் வடிவாகப் பகுத்துப் பிரணவர் முதலிய சிவன்கள் பதின்மருக்கும் அனாதிருத்திரர் முதலிய பதினெண்மருக்கும் காமிக முதலிய தொகுதி முறையானே உபதேசித்தருளினர். இதனைத் தந்திராவதாரத்தில் விரித்துக் காட்டுவாம். இனி அவ்வவ்விடங்களினின்று முறையானே மாமேரு சிகரத்தை அடைந்த அவ்வாகமக் கடலினின்றுஞ் சாரமாக எடுத்து மந்தவுணர்வுடையோர்க் கருளுதற் பொருட்டு நான்கு பாதங்களுடைய பௌட்கரமெனப் பெயரிய ஆகமத்தை அறிவுறுத்தருளிய சிகண்ட முதல்வனை பாற் சரியை கிரியா (யோக) பாதங்களைக் கேட்ட சனற் குமார முனிவர் முதலாயினர் ...அப்பெருமானது திருமுக நோக்கம் பெற்றுத் துதித்தன் முன்னாக வினவுகின்றனர்" என்பதாம்.

இவ் வேதாகமங்கள் வடமொழியில உள்ளன வென்பதும், அவை பரம்பரையில் ஓதப்பட்டு வருகின்றன வென்பதும், இறைவனே அவற்றை அருளிச் செய்தனர் என்பதும் அருணந்தி சிவாசாரிய சுவாமிகளின் அருளுபதேசம். அது "ஆரியமா யுறமபொருளோ டின்பம் வீடெல்லா மறைத்துயிர்கட்கு அறிவுசெயல் அளிப்பது நூல் நூல்—கூரியராயுள்ளவர்க ளோதவோதிக் கொண்டுவர லன்முன்னே குற்றமின்றிச்— சீரிய போதிவுடையோன் செப்ப வேண்டும்" என்பதனால் உணரப்படும். பூர்வபக்ஷத்தார்கள் அருமறையாகமங்கள் அனைத்திருக்கும் மூலநூல்கள் தமிழிலிருந்தன வென்று வேண்டியவாறு கூறுவரேல், மெய்கண்ட சந்தானத்திய பீடாதிபரான அருணந்தி சிவாசாரியார் அருளுபதேசத்துக்கு முரணும் முடியும் என்க. இக்காரணங்களினாலே, "நம்மையாளும் முழுமுதலும், அம்முதலை ஒப்பிலைபால் தப்பாமல் தம்பாற் பிணித்தருளிய செப்பருந் திறற் செல்வர்களும் விளையும் தமிழ்மொழியில் நம்மெய்கண்டார் நூல் முதனூலின்றி நிகழ்வது காலத்தொன்மையைக் கடந்ததாம் என்க" எனவும், "நூல் காலத்தாற் பிந்தியதே எனினும் நூற்பொருளும் கருத்தும் தமிழ் தோன்றிய காலத்தொட்டே யுள்ளது" எனவும் விரிவுரையாளர் எழுதியது பொருந்தாதென்க. ஆயினும், அவரது தமிழபிமானத்தைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

காமிகாதி சிவாகமங்களின் ஞானபாதங்களுள்ளே ஞானபாதத்துறும் பொருள்களை ஆராய்ந்து நிர்ணயஞ் செய்வதற்கு எழுந்தது சிவஞான போதம். சிவஞானபோதமென்ற பெயரும் இப்பொருள் தருவதெனபது திராவிடபாடியகாரர் முதலிய பேராசிரியர்கள் காட்டியவாறு பற்றி உணரப்படும். அஃதாவது சிவஞானம் இருவகைப்படும். "உயர்ஞான மிரண்டாம் மாறுமலம் கல அகலாத மன்னுபோதத் திருவருளோன் ஒன்றதனைத் தெளிய வோதுஞ் சிவாகமமென் றலகறியச் செப்பு நூலே" என்று ஸ்ரீமத் உமாபதி சிவம் விளக்கியருளியபடி திருவருள் ஞானமொன்று; மற்றொன்று அதனை அநுமானஞ்செய்துணர்தலும் சிவாகமமாம். திருவருள் ஞானத்தை உணர்த்துவது சிவாகமங்களெல்லாவற்றிற்கும் உரியதேயாம். ஆகலின் இங்குச் சிவஞானத்தைப் போதிப்ப தென்பது சிவாகமங்களின் பொருள்களை முரணறுத்து நிர்ணயிப்பது என்பதாம். இது சிவஞானபாடியத்துங் காண்க.

சிவாகமங்கள் அனைத்தினுங் கூறப்படும் பொருள்களை முழுதுணர்ந்து முரணறுத்தல் ஏனையோரால் இயலாததாகலின், முற்றுணர்வுடைய இறைவனே அது செய்தல் வேண்டுமென்பது பெறப்பட்டது. இவ்வுண்மை சிவஞானபோதமாபாடியத்தில நன்கு கிளக்கப்பட்டுள்ளது. அதனை இங்கே காட்டுவாம். அஃதாவது:— "ஏனை மூன்று பாதப் பொருள்களையும் ஆராயுட நூல்களாவன யாவையெனின்; அவை சோமசம்பு சிவாசாரியார் செய்த கிரியாகாண்டக் கிரமாவலி முதலியவாம் என்க. அற்றேல ஞானபாதப்பொருளாராய்ச்சி நூலும் பிற்காலத்து ஆசிரியன்மாரே கூறவமையும்; ஆகமத்துட் கூற வேண்டாம் பிறவெனில்; ஆசிரியன்மார் அவை அறுதிட்டுக்கும் முறைமை ஆராயப் புகுந்தாரன்றி அவற்றிற்குப பொருளொருமை ஆராயப் புகுந்தாரலர். இனி ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவதாகலின், ஆண்டு வேறுபடுதல பொருந்தாதாயினும், ஆன்மாக்களின் மலபரிபாக தாரதம்மியத்திற கேற்பத் திலாருத்தி முறைமைத்தாக உணர்த்துதல் மரபு என்பது பற்றி, அங்ஙனங் கூறும் ஆகமங்களை நோக்குவோர் அவைமொன்றோடொன்று முரணுவனபோலக் கருதி மயங்குவர். அங்ஙனம் மயங்காமைப் பொருட்டு ஞானபாதப் பொருள்களை யெல்லாம் பொதுவுண்மையென இருவகைப்படுத்து ஆராய்ச்சி செய்து ஒரு தலையான் உணர்த்தவேண்டுதலின் அஃது ஏனையோரான் ஆகாமையின் வேண்டுமென்க" என்பதாம். ஆகையினாலே சிவஞானபோதம் வடமொழிச் சிவாகமத்தின் ஓர் பகுதியாய் இருக்க வேண்டுமேயன்றி, ஏனை ஆசிரியர்களாற் செய்யப்பட்டிருத்தல் முடியாதெனத் தெளிவாகின்றது. இங்ஙனமிருத்தலினானே பூருவபக்ஷத்தியார் கூற்றுச் சிறிதும் பொருந்தமற்றதெனபது நன்கு தெளிவாகின்றது.

—தொடரும்

மதுரைமாநகரின்கண் நடந்த

இயற்றமிழ் மகாநாட்டுச் சொற்பொழிவு

1ம் பக்கத் தொடர்ச்சி

நாம் செய்யவேண்டுவனவும் ஒருவாறு கூறப்படும். அதனை வளர்த்தற்குரிய நெறிகளை ஆராய்வதே இம்மகாநாட்டின் நோக்கமாகும். அவ்வழி, முன்னர் நிலைமையைச் சிறிது மொழிதல் முறைமையேயாம். ஏனெனில், 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை' * ஆயினும் முன்னேற்றங்கருதி முயலுங்கால் முன்னிலையை யறிந்துகொள்ளுதல் அம்முன்னேற்றத்துக்குத் துணையாமாதலின், அப்பொழுது அதனைப் பேசுதல் பழங்கதை பேசுதலாய்க் குறைபாகாதாதலால் என்க.

பண்டைக்காலத்தில் நம் தமிழகத்தில் வாழ்ந்த பல்வேறு பாவலரும் காவலரும் யாவரும் இத்தமிழ் வளர்ச்சிக்காகப் பெருந்தொண்டு செய்து பெயர்பொறித்து வைத்திருக்கின்றனர்.

செந்தமிழ்முனிவன் என்று சிறப்பிக்கப்பெற்ற அகத்தியன் சிவபெருமானிடத்துத் தமிழ்கற்றுத் தென்னாடு வந்தான் என்னுஞ் செய்தி அறிஞரனைவரும் அறிந்தது. வேறு பிறரிடம் அவன் தமிழ்கற்றானென்று கூறுவாரும் உளராயின், அதுபற்றிய ஆராய்ச்சி ஈண்டைக்குவேண்டாததே. அவன் தமிழ் கற்றுத் தென்னாட்டில் பொதியின் மலையிலிருந்து தமிழிலக்கணஞ் செய்ததில் மதபேதமில்லை. அவன் வருகைக்கு முன்பே தென்னாட்டில் தமிழ் சிறந்திருந்ததென்றும், பின் அவன் அந்நிலத்துலக வழக்கையும் நூல்வழக்கையும் ஆராய்ந்து புத்திலக்கணம் வகுத்தான் என்றும் ஆன்றோர் கூறுவர்.

ஒரு மொழியின் வளர்ச்சி அம்மொழி வழங்கும் நிலத்துமக்களின் நாகரிகவளர்ச்சியை நன்குகாட்டும். ஏனெனில், நாகரிக வளர்ச்சியுடைய மக்கள்மொழியே நன்கு வளர்ந்திருக்குமாதலால் என்க. அகத்தியன் தமிழ் நிலத்தின் இருவகை வழக்கையும் ஆராய்ந்து நூலியற்றினன் என்றதனால் அவ்வகத்தியன் வருகைக்கு முன்னதாகிய பழைமைமிக்க காலத்திலேயே தமிழ்மக்கள் நாகரிக வளர்ச்சியுடையவராய்த் தம்மொழியை இருவழக்கினும் நன்கு வளர்த்துவந்திருக்கின்றனரென்பது புலனும். இங்ஙனமாகவே நாம் நம்மொழியாகிய இம்மொழியை இன்று குன்றவிடுவோமாயின், அதுநமது நாகரிகம் குன்றிய நிலையையே தெளிவாக விளக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமுண்டோ? அகத்திய முனிவன் தனக்கு முன்புள்ள உலக வழக்கையும் நூல்வழக்கையும் ஆராய்ந்து, இரண்டன் அமைதிகளும் தழுவி இலக்கணம் வகுத்தான் என்றதனாலும், தொல்காப்பியன் முதலிய பிறரும் இவ்வாறே வகுத்தனர் என்பதனாலும் இருவகைவழக்கையும் தழுவிக் குறைவின்றி மொழியை வளர்த்தல் வேண்டும் என்பதனை உணரலாம். நூல் வழக்கொன்றையே கருதினும், உலக வழக்கொன்றையே தழுவினும், உலக வழக்கொன்றையே தழுவினும் மொழி வளர்ச்சியடையாது. நூல் வழக்கின்றி உலக வழக்கனவே யொழிந்த மொழிகளும் அவற்றிற்கு மாறாக உலக வழக்கொழிந்து நூல்வழக்கொடு நின்ற மொழிகளும் உண்மை அறிஞர் பலரும் அறிந்ததே.

இன்னும், இவ்வகத்திய முனிவன் இலக்கண நூலோடு மருத்துவம் முதலிய பிறவகையான பல நூல்களும் இயற்றினன் என்றும், தொல்காப்பியன் முதலான மாணவர்களுக்குத் தமிழ்கற்பித்தானென்றும், சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தான் என்றும் கூறுகின்றனர். தாம் வல்ல நூல்களிலெல்லாம் நூலியற்றுதல், மாணவர்க்குக் கற்பித்தல், புலவர்குழுவிடை யிருந்து மொழி வளர்ச்சிக்குரியவற்றை ஆராய்தல் ஆகியவை யெல்லாம் மொழிவளர்க்கும் முறைகளாமன்றோ?

அகத்தியமுனிவனிடத்தில் இயற்றமிழுணர்ந்த மாணவர் தொல்காப்பியன் முதலிய பன்னிருவர் என்பர். அவர்கள் தாம் தமிழ்கற்றதனோடமையாமல், தனித்தனியாகவும் சேர்ந்தும் இலக்கணமியற்றிச் செய்து தமிழ்த் தொண்டாற்றினர் என்றும் கூறுவர். தமிழ்கற்றுத் தேர்ச்சிபெறுவார் ஒவ்வொருவரும் பன்மாணியன்ற தமிழ்ப்பணி செய்தல் வேண்டுமென்பதை இதனால் அறியலாம்.

தமிழகம், பண்டு சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தரால் ஆட்சிக்குட்பட்ட தென்பது நம்மவர் நன்கறிந்தது. அவருள், பாண்டிய மன்னர் தம நாட்டில மூன்று சங்கங்கள் அமைத்துப் புலவர்களை ஒருங்கு கூட்டித் தமிழாராயவித்து அதனைப் போற்றி வளர்த்ததும அறிஞர் பலரும் அறிந்ததே. அச்சங்கங்களுள் முதலாவது சங்கம், பாண்டிய நாட்டின் தென்பாகத்திற் கடல் கொள்ளப்பட்ட பகுதியிலிருந்த தென்மதுரையிலிருந்த தென்றும், அகத்தியன் முதலிய பல புலவர்கள் அச்சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தன ரென்றும், இரண்டாவது சங்கம், பின்னர் அந்நாட்டின் தலைநகரமாகிய கபாடபுரத்திலிருந்த தென்றும், அகத்தியன் தொல்காப்பியன் முதலிய புலவர்கள் அதன்கண் இருந்து தமிழாராய்ந்தன ரென்றும் முதலிய சங்க வரலாறுகள் கூறப்படுகின்றன. முடத்திருமாறன் என்னும் பாண்டியன் தனநாட்டின் தென்னாட்டின் தெனபாலுள்ள பகுதியைக் கடல்கொள்ள அந்நாட்டின் வடபாலுள்ள உத்தர மதுரையில மூன்றும் சங்கத்தை நிறுவினன் என அச்சங்கவரலாறு வருகின்றது. இம்மூன்று சங்கங்களையும் போற்றிய பாண்டிய மன்னருட கவியரங்கேறியவர்களும் பலர் உளரென்று அறிகின்றோம்.

இங்ஙனம் பெருஞ் சங்கங்களமைத்துப் பல இடங்களிலுமுள்ள புலவர் பலரையும் ஒரு வழியமைத்துப் பரம்பரையாகத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வந்த இப்பாண்டியரது தாயமொழிப்பற்றும் இடையிடுகளால் தடைபட்டு உடையாத உள்ளமும் நாமனைவரும் கொண்டு போற்றத் தக்கனவாம். இரண்டாவதுசங்கம் கடல்கோளால் அழியவும் அதனை ஆதரித்த வேந்தன், தன விடாமுயற்சியால உத்தர மதுரையில் மூன்றாவது சங்கம் அமைத்து அப்புலவர்களை மீண்டும் ஒருவழிக் கூட்டி முன்னைப் புலவர் பலர் செய்தனவாகிய தமிழ்நூல்களின் அணிகலன்கள் பல அழியாமற் காத்தானெனின், அவர்கள் தம்மணியை விடாது செய்யுமாறு செய்தானென்பதை உன்னுவோமாயின் நம் உள்ளங் கிளர்ச்செழாது ஒடுங்கி விடத் தகுமோ? இடனுண்டோ? இம்மூன்றுஞ் சங்கத்திற்கு உறைவிடமாகிய இப்பாண்டியர் நன்னகரம் தமிழ் வளர்ச்சிக்குதவி இத்தகைய மகநாடு நடைபெறுதற்குப் பெரிதும் பொருத்தமுடைத்தாகும்.

சங்கமமைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னருட் பலர் புலவர்களைப் போற்றியதோடு தாமும் கவியரங்கேறியவராக இருந்தன ரென்பது அவருடைய தமிழார்வத்தை யறிதற்குச் சிறந்த சான்றாகும். பிற புலவரிடையும் இத்தகைய பெருமக்கள் பலருளர். புகழின் பொருட்டுப் பொருள் கொடுத்து இரந்து சென்ற புலவர்களைப் புரந்த சிறந்த புரவலர் பலரென்பதினும், அவர் புலவராகவுமிருப்பின், அது பொன்மலர் நாற்றமுடைத்தாதல போலுமன்றோ! அங்ஙனமாயின் இவர் புலவரது அருமை அறிந்து போற்றுவதோடு அப்புலவருள் ஒருவராகவும் இருந்து இவ்விருவகையானும் தமிழ்ப் பணிபுரிவர். இவ்வாற்றான் இவர் பிறபுலவரினும் போற்றற்குரியவராகின்றனர். எனவே, தமிழ்கற்றலும் நூலியற்றலும் அன்னோர்க்கே யுரியனவென்று செல்வர் நினைத்தற்கிடமில்லை யென்க.

பாண்டியரமைத்த மூன்று சங்கங்களன்றியும் பிறவிடங்களிலும் பலசங்கங்கள் இருந்தன வென்றும், மேற்கூறிய சங்ககாலத்துக்குப் பின்னும் பற்பல சங்கங்கள் தோன்றியிருந்தன வென்றும், பொதிய மலையின்கண், அகத்தியர் சங்கமொன்றிருந்ததென்றும், மூன்று தமிழுக்கும் தனித்தனியான சங்கங்கள் இம்மதுரையிலிருந்தன வென்றும் தமிழறிஞர் கூறுவர்.

இங்ஙனம் பலபல சங்கங்கள் ஆங்காங்கமைத்து தமிழ் வளர்க்குங் கழகங்கள் அமைதல் வேண்டும். ஊர்தோறும் தமிழ்க்கல்வி பெறுதற்குரிய கழகங்களிருத்தலும் உசிதமாகும். "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்றார் பாரதியாரும். முத்தமிழுக்குந் தனித்தனியாகச் சங்கங்கள் இருந்தன வென்றதனால் தமிழின் ஒவ்வொரு பகுதியும் தனித்தனியே சிறப்பாக ஆராயப்பட்டது விளங்கும். இவ்வாறமைப்பைப் பெற்ற இம் மதுரையில் நடைபெறும் இம்முத்தமிழ்நாட்டில் ஒவ்வொரு தமிழும் ஒவ்வொரு நாளில இப்போது சிறப்பாக ஆராயப்படுவது ஏற்புடையதே.

மேற்கூறிய சங்கங்களின் அரசர்கள் புலவர்களை ஒருங்கு கூட்டித் தமிழாராய்வித்து நூலியற்றுவித்து, செய்தடன், நூல்தொகுப்பித்தும் செய்தன அழியாமற் பாதுகாத்தனர் என்றும் கூறுவர். இவை பண்டைப்புலவர் பாடல்களில் இறந்தன ஒழிய எஞ்சியவற்றையும் பிற் புலவர் பாடல்களையும் இறவாமற் பாதுகாத்தற் பொருட்டுத் தொகுக்கப்பெற்ற நூல்களாம். இங்ஙனம் போற்றப்பட்டு இன்று நமக்குக் கிடைக்கப் பெற்றிருப்பனவன்றிப் பல பழந்தமிழ் நூல்களும் தனிப் பாக்களும் உரைகளும் இறந்தொழிந்தன என்று கேட்கின்றோம். இதற்குப் பெரிதும் வருத்தத்தைத் தருகின்றது. இங்ஙனம் இறந்தொழியாமற் காத்தற்கு இக்காலத்தில் பல வசதிகள் உள்ளன. அன்பர்களுடைய அரிய முயற்சியால் பலநூல்கள் அழியாமற் காக்கப்பெற்றிருக்கின்றன. நூல்கள்பல வெளிவராமலே இறந்தொழிதல் முதலிய குறை யொன்றும் நேராமல், தமிழைக் காக்கும்பணி அதிகமாகப் பெருகுதல் வேண்டும். இவ்வாற்றால் தமிழ் நூல்கள் என்றும் பொன்றுதலின்றி இன்ப மூட்டுவனவாகும்.

இச்சங்கங்கள் புலவர்கள் செய்த நூல்களை அரங்கேற்றுமிடங்களாகவுமிருந்தன வென்றறிகின்றோம். தொல்காப்பியம் நிலந்தருதிருவிற் பாண்டியன் மாகீர்த்தியின் அவைக்கண் அதங்கோட்டாசானுடைய தடைகட்கு விடை கூறியபின் அரங்கேற்றப்பட்டதென்பர். பின்னும் இத்தகைய வரலாறுகள் பல கேட்கப்படுகின்றன. எனவே, நூலரங்கேற்றுதல் என்பது சங்ககாலத்தும் பிற்காலத்தும் நம் நாட்டில வழக்கமாயிருந்த தென்று அறிபவர். இம்முறை யிருக்குமாயின், புலமையில்லாதவரும் தம அறிவிற்கேற்ற நூல்களை இயற்றி வெளியிட்டுப் புலவரெனத் தம்மைச் சேர்த்தார இலர் புகழ்ந் திரிதல் இயலாது. ஒருவர் செய்த நூலை ஒரு புலவர் குழுவைக் கொண்டு வழுவின்மை கண்டு அங்கீகாரஞ் செய்து பின் உலகின்கட் பரப்பும் அம்முறை இக்காலத்தும் ஏற்றவாறு பின் கொள்ளத்தக்கது. முக்கியமாகப் புதிய சொற்களைப் படைத்தல போன்ற துறைகளில் இது வேண்டற்பாற்று என்று கருதுகிறேன். தமிழில் நூதனமாக எழுதப்படும் மேல்நாட்டுக் கலைகளுக்குரிய சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை ஆக்குவோருள், ஒரேசொற்றமையின்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக ஆக்குகின்றனர். இவை ஒரு அங்கீகாரச் சங்கத்தாரால் ஆராய்ந்து அங்கீகரிக்கப்படுமாயின், தமிழுக்கு இன்றியமையாதனவாய் அவரவர்க்குத் தோன்றியவாறே ஆக்கப்படும் சொற்கள் புகுதற்கிடமிராது. பொருளுக்கிசையாதனவும் புகுதமாட்டா. பிறவழுக்களும் நீங்கும். தமிழ்மொழி அளவில்லாத பல புதிய சொற்களால் தூய்மை கெடாது வளம் பெறுமென்றுங் கிடைக்கும்.

தமிழ்நாட்டுப் பிறவேந்தராகிய சேரரும் சோழரும் இப்பாண்டியர் சங்கத்திற்கு ஆதரவு காட்டி வந்திருக்கின்றனர் என்றும், அவர்கள் இச்சங்கத்துச் சான்றோர்களைப் பெரிதும் போற்றி இவர்களைக் கொண்டு தமிழ்ப்பணிகள் செய்வித்திருக்கின்றன ரென்றும் தமிழறிஞர் கூறுவர். அங்ஙனமே பிறகுறுமன்னரும் அவர்போன்ற பிறரும் இச்சங்கத்துச் சான்றோர்களைத் தம உயிரினும் சிறக்க நேசித்து அவர்கள் பொருட்குறையால் இடர்ப்படாமல் ஆதரித்தனர் என்பர். ஒரு காலத்தில் பாண்டிய நாட்டிற் பஞ்சம் தோன்ற அக்காலம் முழுவதும் இச்சங்கப் புலவர்களை ஆலஞ்சேரி அயிந்தன் என்பானொருவன ஆதரித்தான் என்றும் அறிகின்றோம். இவ்வாறு பாண்டிய சங்கம் எல்லாராலும் ஆதரிக்கப் பெற்றது தமிழக முழுமைக்கும் பொதுமையில் நின்ற ஒரு பெருங்கழகமாய் என்று அறிஞர் துணிகின்றனர். இவ்வாற்றால் தமிழ் வளர்ச்சியில் தமிழகத்தினரிடை நிலவிய ஒற்றுமையை உணரலாம். இதுத தமிழன்பர்களுக்கு ஒன்று சொலவிருக்கின்றது.

—வரும்
செந்தமிழ்

---

* பாரதியார்

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு பெ. அரு. மு. சி முத்துச்சாமி செட்டியார் அன்பிரதர் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

நம்.	தி.	ரூ.	ஊரும் பெயரும்	நகைகளின் விபரம்
1941-ம் ஆண்டு மார்ச்சு மாதம்				
920	24	10	தலையாளி சி சுப்பிரமணியம்	இமி நீலக்கல் 2ம் வைடூரியக்கல் 2ம் சிவப்புக்கல் 2 மஞ்சள்கல் 1
ஜூன் மாதம்				
10711	30	80	தலையாளி சி சுப்பிரமணியம்	இமிகல் டிம்பியுடன் முரிச்சக் குத்தி அட்டியல் 1
ஜூலை மாதம்				
10800	6	35	முல்லைத்தீவு அ இராமசாமி செட்டியார்	பின்னைக்காப்பு சோடி 1
10867	10	65	கொக்குவில் கிழக்கு வே தம்பு	சேர்மானக்கல் ஆடுதன் பொட்டு கோர்த்த குண்டுச் சங்கிலி 1
11092	24	10	கொட்டடி நா சின்னத்துரை	தாலி 1
ஆகஸ்டு மாதம்				
11642	24	16	பெருமாள் கோவிலடி செ செல்லத்துரை	காட்டுக்கடுக்கன் சோடி 1
11664	25	12	நவாலி தெற்கு மு தவநாயகம்	தாலி 1
11682	26	110	நவாலி த கந்தையா	இமிகல் முகப்புடன் பெங்களூர் கொலுசுக் காப்பு சோடி 1
11693	27	15	பிரப்பங்குளம் பொ இராமநாதன்	விலாசம் போட்ட சிகில் மோதிரம் 1

விற்பனவு நிகழும் சித்திரபானு வருஷம் புரட்டாதி மாசம் 30-ம் திகதி (16.10. 42) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகைபிறிக்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை,
வெந்தீஸ் மேஸ்தர்

Mis 124 1—5.10.42

'வாசகனின்' அவகோலம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

கிலையை எடுத்துக் காட்டிவிட்டாரல்லவா? அதற்காக ஒரு முறை நன்றிகூறிக்கொள்ளுகிறோம். அவர் தலைவங்கம் நம் கோலத்திற்குச் சாலப் பொருத்தமானதே. முதலில் திரிகவனுப் வைதீகக் கோலத்திற் கிடந்து, அழுந்திப் பின் சைவதமுட் புகுந்து புதுமைக் கோலமடைந்தோம். ஆம் இப்போது நாம் அடைந்திருக்கும் கோலத்தை அன்பர் வாசகன் குறிப்பிட்டபடி 'நவகோலம்' என்றே சாலவேண்டும். உண்மையில நவமான கோலந்தான்!

'இடையிடையே கட்டுரை வரைந்து கொண்டிரு' என்றும் 'உன் சங்கீதம் மேலும் மேலும் விருத்தியாகட்டும்' என்றும் ஆசீர்வதிப்பதோடு, 'நீ பாக்கியம் பெற்றதும் எனக்குப் பாக்கியமே' என்று பெருமைபாக உறவு பாராட்டிக் கொண்டிருக்கிறார் வாசகன். இவ்வளவு ஆராமமில அபிமானம் காட்டும் வாசகனுக்கு நாம் இன்னொரு முறை நன்றி செலுத்துவதில் என்ன தடையிருக்கிறது?

ஓம் சுத்த சக்தி.

[இவ் வியாசத்தின் சிற்சில பாகம் தக்க காரணமபற்றித் தவிர்க்கப்பட்டுள்ளன.—பத்திராசிரியர்.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிரந்தரமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி) (Y. 164. 1-11-41 to 31-10-42)

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்

"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4-3-42—3-3-43

பிரதானமான அறிவித்தல்

லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும் கண்பரிசோதகருமாகிய

மிஸ்றர். S. சாஸ் பத்திராஜ

இப்போது கிறைஸ்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறர்.

இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை அங்கு இருப்பார்.

ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக தர்பராவாத் தோட்டம், வரிபப்போலா, வடமேல்மாகாணம்.

Y115 18-8-42—17-11-42

பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு ஏப்பிறில் மாதத் தொடக்கமாக யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்

தாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்

சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச் சிறிது உயர்த்தியுள்ளார்:-

இந்துசாதனம் தமிழ்ப்பிரதி,	வருடமொன்றிற்கு	பட்டின எல்லையுள்	6.50
,, ஆங்கிலப்பிரதி	,,	,,	6.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	10.50
தமிழ்ப்பிரதி	,,	பிறவூர்கட்கு	9.50
ஆங்கிலப்பிரதி	,,	,,	9.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	13.50

தனிப்பிரதி 7 சதம்

வெளிவந்துவிட்டது!

சைவ சித்தாந்த உண்மை

சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பயிலவிரும்பும் ஆங்கில மாணவருக்கு இந்நூல் பெரிதும் பயன்படக்கூடியமுறையில், "விஞ்ஞான சாத்திர மாணவ" ரொருவரால் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரத்திற் காலந்தோறும் எழுதி வெளியிடப்பெற்று வந்தது; இதனை இப்பொழுது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் தொகுத்துப் புத்தகவடிவிற் பலர்க்கும்பயன்படும் வண்ணம் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இது பதினைந்து அதிகாரங்களைக் கொண்டது; திருவாளர் சு. சிவபாதசுந்தரமவர்கள் எழுதிய நான்முகத்தோடு கூடியது. 150 பக்கங்கள் வரையிற் கொண்டது. சைவமக்களெல்லாரும் இலகுவில் வாங்கிப் படிக்கவேண்டுமென்ற நோக்கம்பற்றிப் பிரதியொன்று விலைகுறைத்து 50 சதமென விதிக்கப்பட்டுள்ளது. பெறவிரும்புவோர், மனேஜர், யாழ்ப்பாணம் சைவப்பிரகாசயந்திரசாலை, வண்ணார் பண்ணை என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர விகிதம்

முதன் முறைக்கு

ஒரு கலம் ரூபா 10-00
அரைக்கலம் ரூபா 5-50
கால் கலம் ரூபா 4-00
ஒரு அங்குலம் ரூ. 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday 1st October, 1924